உ

3927

முருகன் துணை.

# திருப்போரூர் ஆதீனம்

# சிதம்பரசுவாமிகள்

## பதிற்றுப்பத்தந்தாதியும்

## பரம்பரைச்சுருக்கமும்

இவை

ஷை தேவஸ்தானம் தருமகர்த்தரும்

ஆதீனத்தில ஒன்பதாம்பட்டத் தடிபருமாகிய

முத்துக்குமாரத்தம்பிரான்

சுவாமிகள் அநுமதியில்

வித்வான் - காஞ்சீபுரம்

சபாபதிமுதலியாரவர்கள்

மாணாக்கர்

புரசை அஷ்டாவதானம்

**சபாபதிமுதலியாராலியற்றி**

ஷை தேவஸ்தானம் உதவி

தருமகர்த்தர் கடம்பூர் சுரோத்திரதார்

வேதகிரிமுதலியாரும்,

சகோதரர்

அப்பசாமிமுதலியாரும்

கேட்டுக்கொண்டபடி

புரசையைச்சார்ந்த

சண்முகபுரம் - குப்புசெட்டியாரால்

புக்கத்தார்

**ம. சபாபதிமுதலியாரது**

கல்விவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

பிரஜோத்பத்தி௵ வைகாசி௴.

உ

முருகன் துணை.

# திருப்போரூர்ச்

# சிதம்பரசுவாமிகள்

## பதிற்றுப்பத்தந்தாதி.

### வேம்படிவிநாயகர் காப்பு.

பூம்படியளக்கு நெடியமாணிகர்பூம் ............. *
பொழிறிருப் போரிவாய்நலனுண. .. .. *
டாம்படிமுளைத்த முருகவேள்கருணைக்... .. *
கணிமைகூர் சிதம்பரமுனிசீர் ...... .. *
யாம்படித்தேத்த வைங்கரநால்வா ... .. *
யருணிறை முக்கணுநிலவும் ... .........*
வேம்படிநிழற்கண் வேழமாமுகத்து . .. ...... .*
வித்தகர்பொற்பதம் பணிவாம் . ..... ......*

### நூல்.

பூதலத்தென்றுமுனதிருமலர்த்தாள் புந்தியிலிருத்திநின் புகழ்ச்சீர், காதலித்தோதிநின்னைநாடோறுங் கைகுவித்தகநெகிழ்வுற்றுக், கோதலைத்துயர் நீந்திடவருளியநின் கொள்கையென் னுரைசெய்கேன்போரி, மாதலத்துறைசெவ் வேளருட்கிடனும் வள்ளலேசிதம்பரமணியே. (க)

மணிநிறையொளியுமலரதுமணமும் வருபசும்பாலதுசுவையும், அணியுறுமொழியின் பொருளுமென்றியாண்டு மனுகிய போரியெம்பெருமான், றணிவருகருணை நிழற்குடிகொளுமுன் றத்துவமெவரறிகிற்பார், பண்வுறுமெளியோனுஞ் சிற்றறிவினதோ பகர்சிதம்பரப் பெருந்தவனே (உ)

பரமெனும்பதியும் பசுவுமைவகைய பாசமுமீதிதுவென்று சரதமுள்ளுணர்ந்த தத்துவமூர்த்தி சகநெறியோகவிஞ்ஞான, குரவமெய்ப்பிரணவாசலச்சாரற் குலவுபோரிப்பிரானிருபொற், சரணசேகரநின் சரண்பணியடிமைத் தரத்தினர்க்கென்குறையுளதே

உளதெதுமற்றிலதெதுசகல வுலகமுமுயிர்த்தொகையனை
த்தும், அளவிடவருதன் சந்நிதிவிலாசத் தருள்வெளியுற்றசைந்தா
டக், களவறியாமை யுறைதிருப்போரிக் கந்தவேள் சரணமுன்வய
மாக், கொளவருணிலைத்த சிதம்பரகுரவ கூறுநின்றொண்டரா மவ
ர்க்கே. (௪)

அவனவளதுவா மவைதொறும்பொருந்தி யாண்டருளுடை
யநம்பரம, சிவமுதன்முளைத்த போரியெம்பிரானைச் சிற்றறிவெ
ளியமோம்போற்றத், தவமிகவுளதோ வாதலாலன்ன சச்சிதாநந்தவா
ழ்வினையுள், ளுவகையினுணர்ந்த சிதம்பரமுனிவ வுனைத்துதிசெய
முயன்றனமே. (௫)

முயலொருமாசு மதியுடற்கொருபான் முற்றிலு மாசினுற்
பொதிந்த, கயவனையெடுத்தாண் டருளுநாளுளதோ கடவுளர்மு
னிவரரயன்மால், சயசயவெனநின் றேத்திடும்போரூர்ச் சண்முக
வள்ளலார்பாதாம், புயமுரலளியே சிதம்பரமணியே பொறைமி
கு பெருந்தவக்கொழுந்தே. (௬)

கொழுந்ததுவயிரங் கொள்ளுமோவெறிய கொள்கையிற்ப
ழகியமனதும், அழுந்துமோநின்பாற்போரியாண்டவர்தாட் கன்
புயர்சிதம்பரகுரவ, வெழுந்திடுதிற்கு மோடுமீண்டேகு மிதுநல
ந்தீதெனவுணரா, தழுந்துருளளவும் பொறைகொளாமனதி னுறு
வலி யடக்கலுன்பரமே. (௭)

உன்பெயர்நினைக்க விராட்டுவுள்ளத்தை யுன்பதிதுவாதசாந்
தத்தை, யுன்குருவிருக்கை புருவமத்தியத்தை யுனைத்தவத் தேசிக
னுமம், உன்டணிதிகழும் போரியாண்டவன்பே ருணர்த்துமா ல
வைதருபயன்கள், உன்பரமாக வுற்றனையதனு லுன்புகழெவற்றி
னும்பெரிதே. (அ)

பெரியரைத்துணைக்கொள் பெரியரைப்பிழையேல் பெரிய
ர்தமினத்திருவென்றென், றரியநூன்முரச மறைவதுபல்கா லறிவு
றகேட்டவற்றொன்றும், புரிகுவான்றனியேம் போரிவித்தகர்தா
ள் புனைதருசிதம்பரகுரவ, பிரிவிலாச்சிறியோர் பிழைபொறுத்தா
லல் பெரியவர்கடனன்றோவருளே. (௯)

அருமறையறியே மொருதவம்புரியே மறிவிலார்கூட்டம்வி
ட்டகலேம், பெருமையைமதியேஞ் சிறுமையையுணரோம் பிறவி
யங்கட லைநீந்துவமோ, திருமகள்வளர் போரிப்பிரான்குருவாய்த்
தெரிசனை தந்தவாநீயு, மொருமையவ்வுருவாய் வந்தருளாயோவு
யர்சிதம்பர தபோநிதியே. (௧௦)

## வேறு.

நிதியேபரமார்த் தம்முறுணர், நிறையேபொறையேதென்
போரிப், பதியேமருவும் பெருமானார் பற்றேபற்றும் பெருவா
ழ்வாங், கதியேநிலவுசிதம்பரவான் கனமேயிருளான்மறைவுபடா
மதியேநினதுபதாம்புயமா மலரேயடியேம்பெறுமணியே (கக)

அணிலிவாற்றினை நீள்புனமெய்தி யந்நாளெமதன்னையை நா
டிக், கனியாய்நின்றே விளையாடுங் கதிரோன்போரூர்ப் பெருமா
னார், பணியாழ்கடனீராடுசிதம் - பரமாமுகிலைப்பரவினர்கள், த
ணியாவெழுசன்மத்தின்விடாய் தணிவுற்றழியாநிலையினரே (கஉ)

நிலையுள்ளதனை நினையாமல் நிலையில்லதனை நிலையுளதென்
றலைபுல்லறிவோருறவினைவிட் டரசேயுனையன்பொடுபரவுந்
தலைநல்லுணர்வோரவைகூடில தன்னபோரிக்கந்தனை நாடுங்
கலைவல்லசிதம்பரமுனிவா கழலைக்கருதுந்தகைவருமே. (கந)

தகையாதபரானந்தநெடுஞ் சலதிக்கடலாடியபெரியோர்
வகையாதெனவுள்ளுணர்கில்லா வலியோனெனவேயுழல்வேனை
மிகையாவையுநீத்தருளாயோ விரிநீர்வயல்சூழ்போரூரான்
டகையாதவனாரொளிவெளியுட் டங்குசிதம்பரவின்புருவே (கச)

இன்பமெனச்சொலு மதுபோரு ளிறைவனையேயரு மறை
யெல்லாந், தன்பயனெனவோதுவதென்று சாதனமாதிகளாலுண
ரும், நின்பதபூசனையே நாளும் நேயமுடன்செய லாமெனவுள்
ளன்பகலார்பெறுபேறுளவோ வறகசிதம்பரகுணவரையே (கரு)

வரையாதுகொடுப்பவரெல்லாம் வள்ளியரெனுமுரைகொள்
வரது, விரையாதுணரின்வறிதாமால் மிகுமுணர்வானுணர்பொரு
ளுணர்வு, நிரையாவையுநீகைகண்டாய் நின்கைக்கொடைமுன்னது
நிகரோ, பரையார்தரும்போரிக்குகனைப் பரவுசிதம்பரகனமுகிலே

முகிலையிரந்துகைகூப்பிடலம் முகில்பருவத்தினலாதளியா,
தகிலமிறைஞ்சுமெழிற்போரூ-ரத்தனருட்கடலாடிமகிழ், நிகில
னங்கொடெழுந்தொருசந் நிதிமுறைபொழிநினைவாழ்த்தவுயர், ச
கிலமுணர்ந்தசிதம்பரமா தவநனிதருவைசதாதினமே. (கள)

நினையளவாகியபோழ்தேனுந் திருவருளாளர்பதம்பணியுங்
கனையனுகுறுநெறியாததனைத் தயையுடனுரைசெயவுளநினையின்
உனையெவர்தடைசெயும் வலியர்கொலோ வுயர்வளநிறைபோரிப்
பெருமான், கனைகழலடிமுடி பணிவாய்மை கருதுசிதம்பரசுகவ
மிர்தே. (கஅ)

அமைவுறுபோரித்திருநகரை யயில்வடிவேலனையடிபரவி,யி
லமையவர்நிலையினுமுயர்நிலைசே ரெந்தைநினைத்தொழுமிறையவர்
கள், தமைநனிகவினிவணைந்துமுயர் தவந்திவேயழியாநிதியாம், உ
மையருள்குகனுக்குளமலரோ யுதவுசிதம்பரநிறைமதியே. (௧௯)

மதனசரத்திக லெலவிசெயும்வாயின மதிசொரிகதிர் நிலவெவன்
செயுமால, வதனமலர்க்கிணையாருமின்றார் வரியுறுபடைவிழியென்
செயுமால், சதனநறும்பொழில்சூழ்போரூரச் சண்முகனருள்சி
வஞானச், * சதமம்வயங்கொள்சிதம்பரவான் சுடரையுளங்கொ
ளுமிறைவரையே. (௨௰)

வேறு.

வரைதொறுமாடல்செய்து மாமயிலூர்ந்துநின்வா
யுரையினிலுவந்துன்னுள்ளத் துறைதிருப்போரியெம்மான்
விரைமலரடிககாட்செய்யும் விரகருள்சிதம்பரப்பேர்
நிரைதொடைப்பநுவல்கூர்சந் நிதிமுறைத்தமிழ்வல்லோனே ()

வல்லுறழ்கொங்கைமின்னூர் வலைப்படுமையனீந்தி
யெலனுறழ்நினதுபாத திருங்கரைகாண்டலெந்நாள்
கொல்லுலைவேறகணவள்ளி குஞ்சரிமருளத்போற்றி
நல்லுணர்வெவர்கருமலக் நவிலசிதம்பரக்கோமானே (௨௨)

மானெனவாட்கண்கூந்தன் மாலெனப்பயன்கொளாச்சொல்
தேனெனவெற்றின்பத்தைத் தேடுவார்பாடுவார்கருத்
தானெனவொழிந்துபோரித் தற்பரற்குருகுநீயான்
வானெனற்கிசையுமோதா வளர்சிதம்பரவான்பெற்ற (௨௩)

பேறனைப்போற்றலென்று பேதையேயபகுந்தேன்போரி
யாறுமாமுகற்குத்தொண்டா யனுகுநல்வரம்பெற்றுய்வான்
ஏறுசீர்ச்சிதம்பரட்பே ரின்பமேயன்பேநண்பே
தேறுமுப்பழசசெந்தேனே தெவிட்டிடாச்சுவைக்கற்கண்டே. ()

கண்டதுன்பெடைநாடுங் கருத்தரையவர்தாட்சென்னி
கொண்டதுன்மீதுகாதல கூர்ந்ததிவ்வடிமையோர்பால்
உண்டுவைநாளனின்பா லுள்ளதுபோரியெந்தை
தொண்டுணாசிதம்பரப்போத் தூயவான்குணப்பொற்குன்றே()

குன்றுபோற்செல்வம்பெற்றுங்கொற்றமுங்கொடையும்பெற்றும்
நன்றுபோற்றீதுமென்னும் நற்கதிக்கணிமையான
நின்றுணைப்பாதப்போதை நினைகிலார்க்கென்னும்போரி
யென்றுயைத்துன்மன்னு மெழிற்சிதம்பரமெய்வாழ்வே. (௨௬)

---

* சதனம் - ஆயுதப்பொது.

மெய்யினைப்பொய்யென்றும்பொய் மெய்யென்றுமயங்குறாமல்
உய்யுமாறருளவேண்டி னுனக்கியலாமையுண்டோ
செய்யகம்பெரியோர்நூலம்போற் செறியயன்வினையும்போம்
ஐயனையமுதையுள்ளும் அருட்சிதம்பரத்தக்கோனே. (உஎ)

தக்கதுதகாததின்ன தாமெனவுணர்தறேற்று
மக்களுக்குறுதிசொல்கேன் வளர்திருப்போரூராண்டான்
பக்கம்விட்டகலாதென்றும் பயில்சிதம்பரமுனீந்த்ரன்
தொக்கசீர்பரவிநின்றாற் றோன்றுநல்லுணர்வுதானே (உஅ)

உணவினையுடையைவேண்டியொருநொடிப்பொழுதுஞ்சும்மாத்
தணவுறாதுழைப்புற்றாலுந் தமக்கவற்றினும்வேறுண்டோ
குணனிறைசிதம்பரப்பொற் குன்றைவண்போரிச்செவ்வேள்
மணமலர்த்தாளகஞ்சேர் மருந்தையுட்கொடலன்றே. (உகூ)

கோடிகாலங்கள்வாழ்ந்து கோதையர்மக்கள்செல்வ
நீடினரெனினும்போரி நிருமலர்தரும்பேரின்பந்
தேடியவாழ்க்கைநீங்காச் சிதம்பரகுரவநின்போற்
பாடிலாப்பெரியோர்தொண்டு பரிவிலார்தெரிவிலாரே. (௩0)

வேறு.

ஆரநீள்பொழிற்போரி யம்மான்கழல்
வாரநீடுசிதம்பர வள்ளலை
கூரவாழ்த்திக்கைக கூப்பவிச்சைவன்
பாரநீங்குநற் பன்னபுபிறந்ததே. (௩௧)

பிறவிநோய்க்குப் பெருமருந்தாயதாந்
துறவுநீடுசிதம்பரத் தொல்மைசால்
அறவன்வாழ்திருப் போரியமலர்பால்
உறவுகூர்தவத் தோன்பதம்போற்றலே. (௩௨)

போற்றினேன்திருப் போரிப்பிரான்புகழ்
சாற்றியன்னவன் தண்ணளியாலிருள்
மாற்றிவாழுஞ் சிதம்பரவள்ளலால்
ஆற்றினேன்மனத் தார்துயர்வேலையே. (௩௩)

வேடுவப்பெருமாட்டிதன் வேட்கையின்
வீடுபோரிச்சடாதரர் நீணிலை
கூடும்யோக சிதம்பரக்கொற்றவர்
[illegible]சேர்பத மெய்ந்நூலுபந்ததே. (௩௪)

நயநம்பன்னிரண்டார் தண்ணுறுபோரிவாய்
இயலுறுந்தவ மெய்யுசிதம்பரப்
புயனெடுங்கொடை புண்ணியருள்ளத்தில்
வியனுறும்பத்தி வித்துவிளைப்பதே. (௩௫)

விளைவுமல்கும் வியன்பணைப்போரியின்
முளைதரும்பர மார்த்தத்தைமுன்னிமால்
களைசிதம்பரக் கற்பகமன்பராங்
கிளைஞருக்கரு ணீழல்கிளர்ந்ததே. (௩௬)

கிளவிபின்னை கிளக்கப்பயிற்றுவார்
அளவியன்னசொல் லான்மகிழ்வாரென
வுளமுவந்தென் சொலுங்கொளும்போரிவேல்
இளவற்போற்று சிதம்பரஎந்தையே. (௩௭)

எந்தைபோரி யிறைகழற்காத்தமிழ்ச்
சந்தமாலை தரிக்குஞ்சிதம்பர
வந்தனைற்கடி மைத்திறம்பூண்டவர்க்
கிந்தமாநிலத் தேயிணையாவரோ. (௩௮)

யாவரொன்சொலினும் மெனதுள்ளமா
தேவர்சேய்திருப் போரித்தினகரற்
காவல்கூர்ந்த சிதம்பரவண்ணலை
மேவலென்றும் விடாதிதுதிண்ணமே. (௩௯)

திண்மையாவது போரித்திவாகரன்
வண்மையேயுஞ் சிதம்பரமாதவற்
குண்மைமெய்யன் புடைமையுணர்வரு
நுண்மையன்னவர் நூற்பொருட்டேர்ச்சியே. (௪௰)

வேறு.

தேரும்வாய்மையுஞானமு நீடுத்திறல்கொண்ட
சீருஞ்செல்வமும்வண்மையு மின்னதிருவெல்லாம்
பாரும்வானுஞ்சூழும் போரிப்பரனன்புட்
சாருந்தூயசிதம்பர தேவன்சரணன்றே. (௪௧)

சாதந்தருதென்போரிப் பரமர்சதாசாரத்
திரதந்தருவான்வாலும் வணங்கியெதிர்ந்தேத்தி
வாதந்தழுவுசிதம்பர தேவைவழுத்தும்பேர்
விரதங்கொளலேபொரு ளென்றுமேவோம்விழைவுற்றே (௪௨)

உற்றதுபூமிக்கெட்டிணையும்முன் ஞுணர்கில்லீர்
பெற்றவைதயாயச்சிற்றளவேநீர் பெறும்பேறு
முற்றியதோசமரப்பதியுத்தமர் மொழிவாய்மை
கற்றசிதம்பரதேவனைநாடிக் கருதீரோ. (சங)

தீராசென்மத்தேயுழல்கவ்வை செருக்குள்ளம்
போராதாணவவல்லிருட்டோட்ட பிணிப்பம்மா
சீரார்போருர்வேலனைநாடு சிதம்பரவான்
ஆராவமுதையகம்புறமுய்த்துண ராதார்க்கே. (சச)

உணர்வேயுயிரேயுயிருள்ளொளியே யுயர்வாழ்வே
யிணர்வாட்பொழிலெய்போரிப் பெருமாற்கினியோனே
புணர்வாருறவேஞானசிதம்பர புநிதாநின்
றுணர்வாய்பொற்றாளிணையேயடியோந் துணையாமே. (சரு)

ஆமைப்பொறியையடக்கிலருந்தவ மோபேசா
ஊமைக்குளந்தாமோனமதைப்போ லுணர்வற்றார்
தீமைக்குழலாதாள்க திருப்போரிப்பதிநீங்
காமைகருறவுபொருந்துசிதம்பர வம்மானே. (சசு)

அம்மையிலெத்தவமுன்னினமற்புத மதிநின்னை
யிம்மையிலோதவுமெய்திவணங்கவ மிசைவுண்டாற்
செம்மைதருஞ்சமரப்பதிநாதர் திருத்தொண்டே
எம்மையினிலையமுமென்றசிதம்பர விறையோனே. (சஎ)

இறைவனெனப்பேரிசையினைநன்ன வெழிற்கல்வி
நிறைவனெனத்தவநின்றார்நின்பா னிலைவுற்றார்
நறைவனமார்தென்போரிவருங்குக னார்நண்பிற்
பொறைவளர்போதசிதம்பரமாதவ புங்கவனே. (சஅ)

புங்கவர்நாயகர்போரிநெடும்பதி பொன்னுலகோ
ருங்கதியாகவிருப்புவதென்றுணா யுத்தமனார்
மங்களஞானசிதம்பரதேசிகர் மாதவமே
யெங்களைநாளுமளித்தருளுந்திரு வென்பதுவே. (சகூ)

என்மழலைச்சொல்லுமிஞ்சொலெனக்கொள வேயடியேன்
றன்மதிகொண்டுபுரிந்தநெடுந்தவ மொய்ம்பறியேன்
கன்மனமுங்குழைடச்சமரப்பதி காதல்கொளுஞ்
சின்மயனைத்துதியேழாதுசிதம்பர தேசிகனே. (ருo

## வேறு.

தேசுலாவுதாரகாச லேசர்சேபர்போரிவாய்ப்
பூசராதிபோருநாடு போதநீள்சிதம்பர
மாசிலாமணிக்குவாச மாலையும்பசுந்தமிழ்ப்
பேசுமாலையும்புனைந்து பேணுவார்சொலவாணரே. (ருக)

வாணிலாநெடுஞ்சடைப் புராணர்மைந்தர்போரிதன்
காணியாகவாழ்சிதம்ப ரப்பெயர்க்கலாதரன்
ஏணிலாவுபாதபூச னைக்கிசைந்தவுள்ளமே
கோணிலாவவித்தையான குன்றினைக்கடந்ததே. (ருஉ)

கடல்சுலாவுமண்ணும்விண்ணு மோர்குடைக்கணுகவே
படல்குலாவவாளினுஞ் சிதம்பரத்தயாகரா
மடல்குலாவுதாழைநீடு போரிவாழ்வின்மன்னுவாய்
உடல்குலாவுமாவியென்ன வுறுதிபற்றியுய்யுமே. (ருங)

உய்யவாசைகொண்டதற்-குருற்றிடாதுபாவமே
செய்யஆர்வநீடிலென்ன செம்மைபெற்றுவாழ்துமால்
ஐயபோரியண்ணலுக்கு ளன்பமைந்தமாதவங்
கையுறுதுகூர்சிதம்ப ரத்தனிக்கருத்தனே. (ருச)

கருந்திரைப்படங்கொள்பூ-மிசைக்களித்தகட்டிலுக்
கருந்தருந்தெனத்துறத்து மாவதென்னநின்பெயர்
விருந்தருந்தல்கூடில்யாவு மேவுமால்சிதம்பரப்
பெருந்தவத்தினேசபோரி யானருட்பிரசாதமே. (ருரு)

சாதனம்பயின்றிலேன் றவத்தினின்றுயர்ந்திலேன்
ஓதனம்பொருளையுண்டு சேர்த்துடுக்கவுன்னினேன்
ஆதனந்தனுள்ளமென்று போரியாண்டவன்கொளு
மாதனம்பெறுஞ்சிதம் பரப்பிரபோதவள்ளலே. (ருசு)

வள்ளிதெய்வயானையார் மணாளனீடுபோரியுள்
வெள்ளிமால்விடைத்தியாக கைலநாதர்மெய்யனை
யுள்ளியுள்ளியத்தவத்தி லோங்கிவாழ்சிதம்பரத்
தெள்ளுமாமணிக்கெனெஞ்சு சேர்ந்துகாதல்கூர்ந்ததே. (ருஎ)

கூரயிற்கரங்கொடக் குறும்புசூர்தடிந்துவிண்
ணோரயில்வுறுஞ்சுகத் துறத்துபோரிநாதர்தாட்
சேரயிக்கியம்பெறுஞ் சிதம்பரச்சிரோமணி
காரயிற்கண்மாதர்மையல் கட்டறுக்கவல்லதே. (ருஅ)

வல்லடுத்தகொங்கைபாகர் மைந்தர்போரிவாழ்வுறாஉம்
சொல்லடுத்தமாதவச் சிதம்பரச்செழுஞ்சுடர்
கல்லடுத்தவென்மனங் குழைந்திடக்கதிர்த்துநீ
டல்லடுத்ததீதெலா மகற்றியங்குதித்ததே. (ருகூ)

உதிக்கும்வாணிலாவளர்ந் துடன்குறைந்துதேயுமால்
கதிக்கும்வேலர்போரிவாழ் சிதம்பரக்கலாநிதி
பதிக்குஞானமானதண்மை பற்றுநர்க்களித்துளே
மதிக்குமாறுவளர்தல்தேய்தல் வாடலின்றிநீடுமே. (சு0)

வேறு.

நீடியபோரியி னூடுசிதம்பரப்
பீடுடையார்பத நாடுநர்நல்லரே. (சுக)

நலசிதம்பரச், செல்வர்பெருந்துணை
புலனுநர்போரிவேல் வல்லவனன்பரே. (சுஉ)

அன்பனையாள்பதி, யென்பர்சிதம்பர
மன்புகழ்வேலவர், பொன்பயில்போரியே. (சுங)

போரிவரன்கழல், சார்மினெருங்கருள்
வாரிசிதம்பர, ஆரியனைக்கொடே. (சுச)

கொடியதுயர்க்கடல், வடியவுளத்திடை
முடிவில்சிதம்பர, அடிகளிருந்தவே. (சுரு)

இருந்தருள்போரி, வருங்குகனன்பு
பொருந்துசிதம்பர, அருந்தவர்கோவே. (சுசு)

கோத்தணிசொற்றொடை, சாத்திவணங்குநும்
ஏத்துசிதம்பர, ஆத்தனையன்பினே. (சுஎ)

அன்றெனவின்றெனச், சென்றொழியாதுறி
னன்றுசிதம்பர, வன்றிறலானையே. (சுஅ)

ஆனைமுகத்கிளை, யோனுறைபோரியுண்
ஞானசிதம்பர, மோனியைவாழ்த்துமே. (சுகூ

வாழ்குகன்போரியைச், சூழ்மின்சிதம்பர
ஆழியைநாடுமின், ஊழ்வலியோடுமே. (௭௦)

வேறு.

ஓடியெங்குமொண்பொருள், தேடினூற்றிருந்துமோ
கேடில்சீர்ச்சிதம்பரற், பாடிடார்பயன்களே. (௭௧)

பயன்செய்போரிநம்பரன், வயம்பெறுஞ்சிதம்பரச்
சயந்தரன்றிருப்பணிக், கியன்றநண்பதினியதே. (௭௨)

இனியபோரியெந்தைபாற், கனிவுகூர்சிதம்பரப்
புனிதனாப்பராவுவோர், துனியுறாததூயரே. (௭௩)

தூவியன்னமார்வயல், மேவுபோரியண்ணலா
ரேவல்கூர்சிதம்பரத், தேவனெங்கள்தெய்வமே. (௭௪)

தெய்வமீன்றோர்தேசிகன், செய்வளங்கொள்போரிவாழ்
மெய்யருள்சிதம்பரத், துய்யஞானசோதியே. (௭௫)

ஞானவாளெனத்தமர்க், கூனவன்பகைத்தெறூஉ
மானமார்சிதம்பரத், தானமாவிராகமே. (௭௬)

கமலமென்கழற்சிரத், தமையவைத்தலென்றுவேற்
குமரனுள்சிதம்பர, விமலமெய்த்தவத்தனே. (௭௭)

தவாதசீர்ச்சிதம்பர சுவாமிவேலர்போரியை
யவாவுமெங்களுண்மலர், நிவாததீபமாமரோ. (௭௮)

அராவணிந்தசெஞ்சடை, நிராமயன்குமாரனைப்
பராவுவோர்சிதம்பரப், புராதனன்கிளைஞர்களே (௭௯)

சிறுவர்குற்றயாவையும் மறுவெனக்கொளாதருள்
நிறுவுமால்சிதம்பரப் பொறுமைமிக்கபுண்ணியனே. (௮௦)

வேறு.

புண்ணியம்பெறும் பொருவிலார்தவம்
எண்ணிலாவதோ வெழில்கொள்போரிவாய்

நன்னணியன்னலை நவில்சிதம்பரத்
தின்னணியன்புகழ்ச் சீர்மைசெப்பவே. (௮௧)

செப்புலாமுலைத் தெரிவைமார்மயற்
றப்பலாகுமால் சமரமாபுரி
அப்பனூர்முனூண்-டருள்சிதம்பர
வொப்பிலாமணிக் குவலைகூரவே. (௮௨)

கூரணாம்புலக் கோளர்தம்வயஞ்
சாரலைத்திடுந் தகைசிதம்பரச்
சீரருந்தவச் செம்மல்போரியான்
போகங்கொளும் பெரியர்வீறவே. (௮௩)

வீறுஞானமும் விரவுசெல்வமும்,
ஊறுமின்பமு முதவியாயுள்பன்
னூறுநல்குநா னுவல்சிதம்பரத்
தேறுமாதவன் செவ்விதேரவே. (௮௪)

தேரினொண்சுடர் சேர்தன்போரிமுற்
சாரின்மின்மினித் தன்மையாதல்போற்
பாரினீள்சிதம் பரமணிக்குமுன்
ஓரின்வேறு தேவர்க்குளார்களே. (௮௫)

ஆர்நமக்கெலா மாருயிர்த்துணை
தார்கடம்பெனத் தரிக்குமார்பினன்
ஊர்வநீடிருப் போரிவாழ்வுளங்
கூர்சிதம்பரக் குரவர்போல்வரே. (௮௬)

வரவுபோக்கிலா வாழ்வுநல்குமாம்
புரவுசூழ்ந்த போரிப்பிரான்றரும்
வரசிதம்பரத் தவமகத்துவன்
சரணபங்கயந் தலைக்கொள்பண்பதே (௮௭)

பண்டைவல்லிருட் பகையைவெல்வல
னுண்டுபோரிவா ழுத்தமன்வரங்
கொண்டமெய்ச்சிதம்பர குரவர்தந்
தொண்டர்பொன்னடித் தொண்டுசெய்யவே. (௮௮)

செங்கைகூப்பவுஞ் சென்னிதாழ்த்தவும்
அங்கையாலருச் சிக்கவுந்நலன்
றங்கமார்சிதம் பரசுகோதயம்
எங்களல்லல்தீர்த் தினிதுதந்ததே. (௮௯)

தந்தமாறொலித் தாரகாசலத்
தந்திவண்ணர் வாலாம்பிகைக்கெழின்
மைந்தர்போரியின் வருசிதம்பரத்
தந்தைபான்மனஞ்சார்ந்து நின்றதே. (௯௦)

வேறு.

நிற்குநிலையுந்தன்னடிக்க ணேயவுறவுந்தவப்பயிலக், கற்குமதியுந்தனைப்பணிவார்களுக்குந் தருகின்றாய்சரணம், சொற்குப் பொருளாய்ப்போரியில்வாழ் தோன்றுத்துணையே துணையாக்கொண், டெற்குண்மருவுசிதம்பரப்பே ரிறைவாசரணஞ்சரணுனக்கே.

உன்னைப்பணியவுனக்கழியா வுறுதிதரும்போரிக்கடவுள், தன்னைப்பணியப்பணிமறவாத் தன்மையளிக்கின்றாய்சரணம், பொன்னைப்பணியைநிகரவொரு தானுநினைவும்பொருந்துமென, முன்னைப்பணித்தாள் சிதம்பரப்பேர் முனிவாசரணஞ் சரணுனக்கே

சரவசாங்களாமுலகந் தனதுநினைவினிலவுறுமக்
கரவின்வினைவுதனதுசத்தை கொடுகோனுறுமென்றாய்சரணம்
மரவமுடுவின்மலர்பிரணவ மலைசூழ்போரிப்பரஞான
குரவற்கினியசிதம்புரவான் குன்றேசரணஞ்சரணுனக்கே (௯௧)

உனதுதிரிவாலிலமெனு முருவநாமமினதென்று
மனதுணராதவனருளான் மயர்வுதீர்வென்றுய்சரணத்
தனதனிலுமிக்குயர்செல்வந் தந்தபோரிப்பெருமானைத்
தினமுமிறைஞ்சுசிதம்பரத்தேசிகனேசரணஞ்சரணுனக்கே (௧௪)

சரணர்க்களியானினைவொழிவிற் றழுவுஞ்சொருபநிலையென்று
கரணமொருங்கப்புலப்படுத்திக் கடைத்தேற்றிடுவாய்சரணமுயர்
கிரணபூரணவெனும்போரிக் கேள்வன்றருபேரின்பநிலை
யரணமருவுசிதம்பரவா னந்தகுணவாரியசரணம். (௧௫)

ஆரேயெமதுள்ளுயிர்க்குறுதி யெனவந்தவர்க்குமுப்புடியி
ன்,தூரேயகலச்சொருபஞானந்தோன்றிடுமென்றுய்சரணம், உன
ரேபோரூர்குகனுடையா னுடையான்றனக்குத் தானுடைமைப்
பேரேயென்னுஞ்சிதம்பரத்தன் பெருமாமணியேசரண்சரணம்

மணியேசரணம்சிவஞான வளமேசரணம்சிதம்பரப்பொன்
னணியேசரணம்போரியெம்மா னடிமைக்கியைந்தசிவபுண்யப்
பணியேசரணம்சிவயோகம் பதிந்தபரமானந்தவமு [ணம்
துணியேசரணமெய்ம்மை பொய்ம்மையுணர்ந்ததிருமந்திரசர

திரையில்கடல்போலுயர்சிந்தை தெளிதல்சாக்கிராதீதம்
புரையின்மலவல்லிருளில் சிவபோகம்நிலையென்றுய்சரணம்
வரையில்பிரணவகிரிச்சாரல் வளரும்போரூர்ப்பரமனருட்
கரையினுறையுஞ்சிதம்பரச்செங் கனகமேருவேசரணம். (௧௮)

மேவும்பொருளினினைவொழிந்துவேற்றோர்பொருளினினை
வார்முன், றுவுமிடையின்மனமிலதாற் சாதமஃதென்றுய்சரணம்
யாவுந்தனதாந்திருப்போரி யாறுமுகேசன்புகழ்க்குளமும்
தாவுந்தந்தசிதம்பரமெய்ஞ் ஞானிசரணுன்றிருவடிக்கே. (௧௯)

திருவார்வரலாம்பிகைகயிலைத் தேவர்மைந்தாசரணமெனு
வுருவாய்சரணந்தவவுருவ வள்ளல்சரணம்பூரணந்த

வருவாம்போரூர்ப்பிரானருளினொளியேசரணஞ்சரணம்வன்மை
தருவாய்சிதம்பரப்புநிதா சரணம்ஞானபூதரனே. (௧௦௦)

## வாழி.

தளையோர்புகழ்வேம்படிவேழஞ் சத்திகைலைப்பிரான்பிரணவ *
வளாகுழ்போரிவள்ளிதெய்வ யானைமணாளர்பதம்வாழி ......... *
குருவாஞ்சாந்தலிங்கவள்ளல் குமாரதேவர்நிலைவாழி............ *
அருள்கூர்சிதம்பரத்தேவ ராதினமுமன்பரும்வாழி ............ *

திருப்போரூர்ச்

சிதம்பரசுவாமிகள்

# பதிற்றுப்பத்தந்தாதி

முற்றிற்று.

உ

முருகன் துணை.

# திருப்போரூர்ச்
# சிதம்பரசுவாமிகள்சரித்திரம்.

உலகமிறைஞ்சுநிலைபெற்றுலாதாட்க, காண்டகுவளநிறைபாண்டி நன்னாட்டின், வருபலபாண்டியர்திருவரசிருக்கையாய், மலையமாதவனென நிலவுமெய்க்குரவனும், தலையளிசெயரனி வளர்தமிழ்ப் பெரும்பயன், பொங்கப்பலவின்வளசங்கப்பலகைசேர், தெய்வத்தகையதாம்வையையுடுத்ததா, யெண்ணிலசீர்ங்கயற்கண்ணிமணாளன் திருவிளையாடலிருநாலெட்டு, நிகழ்ந்தருதலமெனப் புகழ்திருமதுரையிற் சங்கப்புலவர்மரபிற்றோன்றிச-சிதம்பரகவிராஜனென்னும் பெயரினரா-யங்கயற்கணம்மையுபாசனாவிரதமேற்கொண்டிருந்தனர்.

கொங்குதேயத்திலுள்ளபேரூர் அவிநாசியென்னுந்தலத்தில் வீரசைவசமயாசாரியராகவீற்றிருந்த சிவப்பிரகாசசுவாமிகளதருள்பெற்றஅவரது சகோதரிபுத்திரராகிய சாந்தலிங்கசுவாமிகள் குருமூர்த்தமாகி அங்கெழுந்தருளியிருந்தநாளிற்கன்னடதேயம் புங்கனூரிலரசியற்புரிந் திளமையிற்றுனே துறவுபூண்டு சாந்தலிங்கசுவாமிகளாலுபதேசம்பெற்றுஅவர்கட்டளைப்படி விருத்தாசலத்தில்வந்த குமாரதேவர் மணிமுத்தாநதிக்கரையில் ஓரரசமரநீழலிலெழுந்தருளியிருக்க அம்மரத்தின்கண்பூர்வம் ஒருகாரணத்தாற் காத்திருந்தபிரமராக்ஷசுகுமாரதேவரது தீக்ஷண்யத்தால் அவர்க்கெதிர்வரலும்யார்நீயெனவினவத் தனது * பூர்வசரித்திரங்களைவிண்ணப்பஞ்செய்துதரிசனைபெற்று முன்னையதேகத்தையடைந்துவிடைகொண்டுசென்றது

---

* பூர்வசரித்திரமாவது தான் கைலைச்சாரலிற் காமியத்தையுத்தேசித்துத்தவஞ்செய்து பரமசிவம்பிரசன்னமானபோது நிஷ்காமியத்தைப்பற்றி வரங்கேட்டதாலிவ்வுருவாகென்றுசபித்ததும் அங்குநிஷ்காமியத்தைமுன்னிட்டுத்தவம்புரிந்த மற்றோர் மூவருள் ஒருவர்சிவப்பிரகாசர், ஒருவர்சாந்தலிங்கர், மற்றொருவர்குமாரதேவராய்வருவரென்றதூஉம் அக்குமாரதேவராற்சாபந்நிவர்த்தியாயிடுமென்றதுமாம்.

இவற்றைஇப்போதுபாடலாகிவருகின்ற சிதம்பரசுவாமிகள் புராணத்திற்கண்டுகொள்க.

இவ்வண்ணங்குமாரதேவர் ஆதமார்த்தத்துறவுமுறைமையறிந்திங்கையாயினைதுதரிசனார்த்தம் அவிராசிக்குச்சென்று விருத்தகிரிக்குவரும் நியமங்கொண்டிருந்தபடியாம்விருத்தகிரியிலிருந்தவர்ம்மார்க்கத்திலேயுரிச்சிவபக்தியிலும் அடியார்பூசனையிலுஞ்சிறந்த அன்புள்ள, ஒருசெட்டியாரதுவேண்டுகோளால்-அவரில்லத்திற் பிக்ஷையங்கீகரித்து நடக்கின்றவராயிருந்தபோது அவருக்குப்புத்திரர்களுண்டாக வநுக்கிரகிக்கப்பிறந்தகுழந்தைகளுக்கு செட்டியார்வித்தியாப்பியாசஞ்செய்விக்கவேண்டிச்-சிதம்பரகவிராஜரைக்குவரக்கண்டுபசரித்து அவரைக்கொண்டுகல்வியயில்வித்துவருகையில்அக்காலத்தில்வந்த குமாரதேவர்அங்குசிதம்பரகவிராஜர் அப்பிள்ளைகளுக்கு வாசிப்பிக்கின்றவன்மையையும் கல்விமாக்கிமையையுங்கேள்வியுற்றுநோக்கிஅவரையாட்கொள்ளக்கருதிச் சிலவேதாந்தச்சொற்களுக்குப்பொருள்வினவஉத்தரஞ்சொல்லவிசையாமற்சும்மாவிருந்ததைநோக்கி நாய்வினவியவைஅரியபொருளினவாதலால்இன்னொருகால் விவண்வரும்பொழுதுசொல்கவென்றுரைத்துச்சென்றுதமதுஆசிரியதரிசனம்பெற்று விருத்தாசலஞ்சேர்ந்திருந்து பின்னும்அவ்வாறுவந்தபோதுசெட்டியார்கிருகத்தில் கவிராஜரைநோக்கிவினவமுன்னையவாறேசும்மாவிருக்கநாம்பிக்ஷைபண்ணிக்கொண்டுவருவதற்குள் முன்வினவியசொற்களுக்குப் பொருள் சொல்லக்கடவையென்று கட்டளையிட்டுள்ளேபோந்துபசித்துவந்துஇருபாம்நோக்கத்தால்கேசாதியாதவரை மூன்றுமுறைநோக்கித்தமதாசிரியரிருக்குந்திசையைமுன்னிவழிக்கொண்டனர்.

சிதம்பரகவிராஜரும் அச்சொற்களின்பொருள்களையுள்ளுணர்ந்து அன்புபத்தியு மேலிட்டுஅவரைவிட்டு நீங்காச்சாயைபோற்றொடர்ந்துசென்று அன்றிரவெல்லாம்நடந்து விடியற்காலையில்அவிராசியிற்குரவர்இருக்கையிற்சேர்ந்தனர் அவ்வமயம்உதயகாலமானதுங்குமாரதேவர்சோமயங்களைத்துத்திருமடத்தின் தலைவாயிலில்வெளிக்கச்சிதம்பரசுவாமி திருவலகிட இங்ஙனம்பணிபுரிந்துவினைர்த்தநியமங்களைமுடித்துமுன்னும்பின்னுமாக இருவரும்பரிணமத்திற்புகுந்துசாந்தலிங்கமூர்த்தி சந்நிதானத்தில்தெரிசனுத்தம்புநன்சாத்திருக்க ஆசிரியர்ஒருக்கத்தினின்றும் புறம்போந்துவருகுகின்ற இருவரையுங்கண்ணுற்றுபீண்டுவ்வோ பெருந்தருளித்ரமியபற்றியுள்ளவைராக்கியசதகம்-தீபம்-அவிரோதவுந்தியார்கொ

[illegible]ருந்தவிப் பிள்ளையும் அன்னுடைய பெயரையும் ஒழிவி லொழுக்கத்தையும் வந்தவைத் தரிசனைத்தந்து குமாரதேவரை நோக்கி அப்பா நாம் உன்னைப் புத்திரனாகக் கொண்டாற்போல நீயுமி வ்வொரு புத்திரனைக்கொணர்ந்தாய் இப்பிள்ளை கல்விகேள்விகளாலமைந்த பக்குவசாலியாதலால் இத்தோன்றலைக்கொண்டு முத்தர்களுக்கு உபாயமுற்றுவித்திடுகவென்று தாம்கொணர்ந்த புத்தகங்களைத் தந்தருளி அவற்றைக் குமாரதேவர் இருகையாலும் ஏற்றுக்கண்களிலொற்றிக்கொண்டு சிதம்பர தேவரிடத்தில் அளிக்க அவரும் கைகளிலேந்திச் சிரத்தில் வைத்து அஞ்சலித்து நிற்கக் குமாரதேவர் ஆசிரியரை வணங்கித் தேவரீர் இப்பிள்ளையைப் புத்திரனாகக் கடாக்ஷித்தல்வேண்டுமென்ன ஆசிரியர் நமக்குப் புத்திரன் நீயிருக்கின்றனை அவ்வாறனக்குப் புத்திரனாக இவ்விளவலைக் கொள்கவென்றருளிவிடைதரக்கொண்டு சிதம்பரசுவாமியுடன் விருத்தாசலத்திலடைந்தனர்.

இங்கு, குமாரதேவர் சிதம்பரதேவருக்கு வாதுளாகமவீராகமங்களிலும் உத்தரசைவசித்தாந்தத்திலும் நிரூபணமாகியுள்ள வீரசாமானியம்-வீரவிசேஷம்-வீரநிராபாரமுதலிய இருபத்தொருதீக்ஷையையும் வீரசைவவிதிமுறையநுக்கிரகித்து இயமாதி அஷ்டயோகங்களையுமுணர்த்தி ஞானோபதேசஞ்செய்து சமாதிகூட்டுவிக்க அவ்வாறேதாம் அவற்றையுள்ளங்கைக்கனிபோல ஐயமாதிருத்தடையுமிழ் நன்குணர்ந்து ஞானசமாதிகூடியிருக்கையில் ஒருமயில்தோன்றித்தனது சிறகைவிரித்துச் சொரூபத்தைமறைத்து நிருத்தஞ்செய்ததைக்குமாரதேவரிடத்தில் விண்ணப்பஞ்செய்ய ஆசிரியர் அத்தரகசியத்தைப்புலப்படுத்தாமல் சிதம்பரமூர்த்தியை நோக்கியுனக்கு உபாசனாமூர்த்தியாயுள்ளது யாதென்ன மதுரை அங்கயற்கண் அம்மையெனக்கேட்டு நம்மையிங்குப் பெரியநாயகியார் ஆட்கொண்டு விருத்தகிரித்தனையாயிருக்கின்றபடி நீமதுரைக்குச்சென்று அங்கயற்கண்ணம்மையையுபாசித்தால் தேவியார் உனக்கு [illegible]யாய் நின்று அதனைப்புலப்படுத்துமென்றுவிடைதரச்சிதம்பரமூர்த்தி ஆசிரியரை வணங்கித் தேவரீரே அதனைத்திருவுளம்பற்றலாகாதோவென ஆசிரியர் அப்பா உனக்குபாசனாமூர்த்தியாயுள்ள தேவியார் சந்நிதிக்கேபோதல் நலமென்றுரைத்தனர்.

குருவாக்கியந்தவறாமல் திருமதுரைக்கெழுந்தருளி நாற்பத்தைந்துநாள்கொண்ட ஒருமண்டல அளவையுள் தேவியார்தரிசனத்

ந்தருளாவிடில் அங்குள்ள பொற்றாமரைத் தீர்த்தத்தில் நாம் வீழ்ந்
துவிபூகமாயிடுவதாக நிச்சயஞ்செய்துகொண்டு தேவியார் சந்நிதிக்
கெதிரில் நாடோறும் பொற்றாமரையிலாடி நித்திய நியமமுற்றி ஒரு
பிடி பச்சறுகும் மூன்றுகை அத்திர்க்கமும் ஓரோவேளைப் புசிப்பாக
வுட்கொண்டு நிஷ்டைசாதித்திருக்கையில் தேவியார் சோதனைக்கா
ரணமாக சுரமுங் கைகாற்பிடிப்புஞ் சிரங்குமுதலிய நோய்களுஞ் சம்
பவிக்க அவற்றால் மிகவும் வருத்தங்கள் நேரிட்டும் தமது உளக்கஞ்
சோராமலும் அருந்தவம் தவறுபடாமலும் நிலைத்துச் சில நாள் செ
ல்லப்பின்பு தம்மால் எழுந்து நிற்கவும் அசையவும் அசக்தராய்த் தவ
றற்றழியும் தாப் நின்ற நிலை பெயராமல் அங்கு தரிசனார்த்தம் வருகின்
றவர்களால் அருகுப் நீரும் வருவித்துத் தினந்தோறும் உச்சிக்காலத்தி
ல் அவற்றைப் புசித்து அந்நாளவைவளையில் தமது விரதத்தை நிறை
வேற்றி மீனாக்ஷியம்மையின் அநுக்கிரகார்த்தங் கலிவெண்பாவெ
ன்னும் ஓர் தமிழ்ப்பிரபந்தம் பாடினர். அதுபோழ்து தேவியார் திரு
வுளமகிழ்ந்து எதிர்வந்தருளி இவரது சரீரத்திலுள்ள பிணிகளுடனே ம
லப்பிணியும் விலகுமாறு மலர்க்கரத்தாற்றடவித் திருவாய்மலர்ந்த
ருள்கின்றார் உனது அநுபவத்திற் சொரூபத்தை மயிலாடி மறைக்கி
ன்றதாவது, இப்பதியின் வடபால் முப்பது யோசனைதூரத்தில் யுத்த
புரியென்று சுப்பிரமணியக்ஷேத்திரம் ஒன்றுண்டு அஃது, இதற்குமு
ன் ஆறுதரம் பிரசித்தியாய் விளங்கியிருந்து இப்போது ஜீரணப்பட்டிரு
க்கின்றது, இனியேழாந்தரம் உன்னாலே ஜீர்ணோத்தாரணமாகி நிலைபெ
ற்று விளங்கவேண்டியதாயுள்ளது - அத்தலமூர்த்தியே உனக்குக் குரு
வடிவாயெழுந் தருளித் தரிசனந்தந்து மேல் உண்மையை விளக்கும்
இக்காரணமாக அக்கடவுள் உனது நிஷ்டாநுபவத்தில் மயிலுருவா
ய்வந்து சொரூபத்தை மறைத்ததென்றுகாண்க ஆதலால் நீயிதுபோ
தே அத்தலத்திற்குச் செல்கவென்று திருவுளம்பற்றினர் இவ்வாறருள்
பெற்ற சிதம்பர தேவர் சிவஞானப்பேற்றையடையும் வண்ணம் எ
ண்ணிய அடியேனுக்கு ஸ்தலஜீர்ணோத்தாரணம் செய்கவென்றே
அருளிச்செய்தீர் தாமே அடியேன் வேண்டுகோளையுங் கிரகிக்கலா
மே என்றுகுறையிரக்கத் தேவியார் இன்றுமுதல் நாற்பது தினங்க
ளுக்குள் அத்தலத்து முருகவேளே ஆசிரியவுருவாய் முன்வந்தருள்
புரியுமாதலால் உனக்கு அவ்விஷ்டசித்தியாகும் இவ்வமயந்தவறு
வுடிக்மேலே ஜனனமெடுக்கையுரு [illegible] சேடிலளவுனாத்துமறைந்

தருளினர் அவ்வாறே சிதம்பரமூர்த்தி-தேவியார் அருட்பிரசாதத்தைமேற்கொண் டடிவணங்கிப்போற்றி யுத்தபுரியென்னுந்திருப்போரூரைநோக்கி வடதிசைவழிக்கொண்டுவருவாராயினர். இஃதுநிற்க.

அந்நாளில்திருப்போரூர் அருவதுமுறைஜீரணமுற்றுப்பனங்காடாகிப் பலவகைக்கொடிகளாலும்செடிகள் விருக்ஷங்களாலும் அடர்ந்ததாயிருந்தது அக்காட்டில் ஒருபெண்பனைச்சாரலில்ஸ்ரீச்சுப்பிரமண்யம் புற்றிடங்கொண்டுவீற்றிருந்தது அக்காட்டின்கிழக்கே சிலர்பயிரிடுந்தொழிலினராய்வீடுகட்டிக்கொண்டிருந்தனர். அவ்வூரில்விஸ்தாரம் பனைமரங்களுள்ளனவாகையால் சான்றார்கள்சிலர் அம்மரங்களிற் பானம்-சாறு-நுங்கு-பழம்-கிழங்குமுதலியவையால் ஜீவனஞ்செய்துவந்தனர், அவருள் ஒருவன் அப்பனங்காட்டிடத்தில் ஒருபெண்பனைமரம் நன்றாயுயர்ந்தோங்கிவளர்ந்து ஓலைக்கோர்பாளையாக அரும்பியிச்சஷ்ந்துக் குலைகள்செழித்திருந்ததைக்கண்டு அம்மரத்தலையடர ஒருங்கொடிகள் சூழ்ந்திருந்ததைக்களைந்து அம்மரத்திலேறிப் பாளைகளைச்சிறுககாத்துக் குடங்களைப்பகட்டியதனாற்கிடைத்தமதுவின்பயனை ஒருபொழுதுகாணவிசேஷ பிரயோசனம்பெற்றுஅன்றுமாலைப்பொழுதில்வந்துபார்க்கமுன்போலவேஅக்கொடிகளால் அது அடரப்பட்டிருந்ததுகண்டு அதுகளைத்துணித்துமறுப்பலவகைகைக்கொண்டனன் அங்ஙனம்நாடோறும் அதிகரித்துப்படர்ந்து சுற்றிக்கொள்ளும்அக்கொடிகளை இரண்டொருமுறைகளைந்து அம்மரத்திற் குடங்குடமாக மதுவையவ்வொருவனேகொண்டுபோகத்தொடங்கினன் நாடோறுங்கொடிகளையறுப்பதில்மிகவும் வருத்தமுற்று அதனைவேருடன் களையவெண்ணி அதற்கேற்ற கருவிகளைக்கொண்டு சிலருடன்வந்து சுற்றிலுமுள்ளபுதர்களைவேர்களைந் துவருகையில் அம்மரத்தின்கீழ்த்திசையினின்றுமேற்றிசையி லோங்கிப்பருத்துககிழேயுருவியோடிய மூலவேரைப்பற்றியரிவாளால்வெட்டஅங்குள்ளபுற்றில்திருமேனிமறைந்துள்ள சுவயம்புவின்மேல்தாக்கினதால் வெட்டுஉண்டாயிற்று அதனைக்கண்டு சான்றான்முதலியோர்துன்மனை அச்சுற்றுத்துடித்து மூர்ச்சையாயினர் இவ்வாறுநோக்கியபிறனொருவன் அயலிலுள்ளபனைமரங்களிலேறிக்கொண்டிருந்தவர்கட்குத்தெரிவிக்கஅவர்கள்பொன்னெனவுந்துமூர்ச்சையுற்றவர்களைச்சீதோபசாரஞ்செய்துபெண்பனை

யின் அடியைப்பற்றிதன்குசோதித்துப்பார்க்க அப்புற்றினுட் சுவ
யம்புவைக்கண்டு அஞ்சிப்பத்திமேலிட்டுமுருகக்கடவுளைத்தோத்தி
ரஞ்செய்ய மூர்ச்சையடைந்து கிடந்தவர்கள் தெளிந்தெழுந்து
போற்றினர் அதுமுதலாக அச்சான்றூர் தமக்குள் ஏணிக்கோர் பெரி
யபணம் ஏற்பாடுசெய்து சுவாமிக்குக் கூரைக்கட்டிடமாக ஓர் சிற்று
ருவம்புரிவித்து அவ்வூர்க் குடிகளுடன்சேர்ந்து சுவாமிக்குப் பூசை
முதலியவைநடத்த ஆதிசைவரொருவனை நியமித்தனர் அவர்முதனு
ள் சுவாமிக்குத் திருமஞ்சனமுதலியசெய்து கற்பூரஆராதனை செய்
கையில அவ்வூரும் குற்றாலயமும் அந்நிலையேவேறோர்காரணமின்றி
ப்பற்றிகொண்டதுகண்டு அவ்வாதிசைவரஞ்சி யோடிப்போயி
னர் ஊராரும்மிகவும்பயந்திருந்தனர் அதுகாரணமாக சுவாமிக்குச்
சின்னாள் பூசைமுதலியவுமில்லாமலிருந்தன.

இப்பால் சிதம்பரசுவாமிகள் அங்கயற்கண் அம்மையருளிய
தைவிண்ணப்பஞ்செய்யநினைந்து மதுரையினின்றும் விருத்தாசல
த்திற்குவந்துபார்க்க அவ்வமயம் குமாரதேவர் நிஷ்டையிலிருந்த
படியால் நிஷ்டைதெளியக் காலநீட்டிக்கும் அதுகாறுமிங்கிருந்து
சேவித்துச் சொல்லிக்கொள்ளவேண்டின் தேவியார்கட்டளையைந
டத்தத் தாமதிக்குமென்றுகருதி (அகண்டாகாரமயமாகிச் சுட்டிறந்
த சுகாதீதமாகி யுலகுயிர்பரமென்றுவேறுகருதற் கேலாத சச்சிதா
நந்த சம்பூரணஜோதியின் வசத்தராய் நின்றநிலைபெயராத) ஆசிரிய
ரை வலமுறவந்து வணங்கிப்புறவிடைகொண்டுவடதிசைவருகையி
ற் பொம்மைய பாளையமென்னும் ஊரிற்சிவாநுபூதிச்செல்வராகி
யும் சதுரக்கள்ளிப்பாலே தமதுணவாக வுண்பவரும் சிதம்பரசுவா
மிகளது அதிதீவரபக்குவதசையால்கைவந்த அநுவபசித்தியைக் கே
ள்வியுற்று அவரைப்பார்க்க விருப்பங்கொண்டிருந்தவருமாகிய பா
லையசுவாமிகளைத் தாமுங்காணுமாறு அவர்வசித்திருக்கும் வீதிவழி
யே செல்லாநிற்க அச்சமயம் வைகறையாகலால் பாலைய சுவாமிகள்
குளக்கரையிலிருந் தெதிராய்வர இருவரும் நோக்கியளவளாவி வச
னித்துக்கொண்டு திருமடத்தில் தெருத்திண்ணையிலெழுந்தருளியி
ருந்து தந்ததாவனஞ்செய்துகொண்டே எட்டுநாள்வரையிராப்பக
லவிடாமற் சுவயாநுபவத்தை முன்னிட்ட நிலைகளைப்பேசிக்கொண்
டிருந்து ஒன்பதாநாளுதயகாலத்தில் மேட்டுமடையில் திரும்பிவர
ப்பூசிக்கொண்டு சிவார்ச்சனைமுடித்து அவருடன்புசித்து விடை

சொன்னவைத்தனர்சின்னாள்பின்பு ஸ்ரீமயிலாசலமென்னும்க்ஷேத்திரத்தில்தமதுகுருமூர்த்தியாகிய ஸ்ரீசுப்பிரமண்யசுவாமிசந்நிதியில் பாலையசுவாமிகள்நிரதிசயாநந்தபூரணராயினர்.

கிளியனூர்வழியேவரும் சிதம்பரதேவர் அவ்வூர்ச்சோலையிற் பாகோடிக்கொண்டிருந்தசெங்குந்தரைப்பசிக்கன்னங்கேட்கஅவர்க ளன்னமிடுதற்குச்சற்றுநேரந்தாமதிக்குமென அங்கிருந்ததமதுநிலையைக்குறிப்பாலுணர்ந்த ஒருவிதந்துவாகிய மூதாட்டியிருவினையொப்புமல பரிபாகம்நேரிட்டிருந்தாளாகையாற் சுவாமிகளைக்கண்டவுடன் பத்திமேலிட்டுவலய்வந்துபணிந்துபசரித்துத்தந்தகேழ்வரகாலாயபுற்கையமுதைப்புசித்து அம்மூதாட்டியைக்கிருபாநோக்கஞ்செய்து நடக்கப்பின்தொடர்ந்த அம்மையைநோக்கித்தாயேநீதொடர்வது யாதுகருதியெனவினவத்தேவரீர்க்குஅடியேன் பணிவிடைபுரிந்துபுனிதையாகவேண்டினேன் அஃதுபாலித்தருளலவேண்டுமென்றுபோற்றக்கேட்டு நாம்திருப்போரூரென்னும் க்ஷேத்திரத்தைஜீரணோத்தாரணஞ்செய்கவென்று மதுரையங்கையற்கண்ணம்மை யருளியவாறு அப்பதிக்குச்செல்லாநின்றோம்இன்னும் ஓராண்டிருந்துநம்பால் வருகவென்றநுஞ்ஞைசெய்து-மலைகான்யாறுகள் பிற்படக்கடந்துதிருப்போரூராகிய பனங்காட்டிலணுகியங்கு வள்ளைப்பூடால்நிறைந்தவோரோடையைக்கண்ணுற்றுநியமங்களைமுற்றிஅவ்வழி வந்தோனைஇங்குக்கோயிலிருக்கின்றதாவென்னச்-சுவாமீ-மலைச்சாரலின்கீழ்பால் வேம்படிவிநாயகர் கோயிலொன்றுள்ளதெனசசிதம்பரதேவர்பிள்ளையார் சந்நிதிக்குவந்திருந்துஅன்றுமுதலிரண்டுநாள்வரை அத்தீர்த்தத்தின்மூழ்கிச்சிவபூசைமுதலியவற்றை முடித்துவசித்தனர். மூன்றுநாள் மாலைப்போதில் அத்தீர்த்தத்திற்கு வருகையிற் கள்வர்சிலர்சுவாமிகளணிந்துள்ளஆபரணங்களைப் பறித்துக்கொண்டுபோகப்பதுங்கியிருந்துவெளிப்பட்ட மாத்திரத்தில்அவர்களுக்குக்கண்கள்தெரியாமற்போய்நடுங்கிநிற்க நீங்கள்யாரென்றுசுவாமிகள்கேட்டவளவில் தாங்கள்இன்றொன்றும் செய்யவந்தகாரியம்இன்னதென்றும்சொன்னவுடன்தாம்பூண்டிருந்தஆபரணங்களைக் கழற்றிக்கொடுத்தலும்அவர்கள்பெற்றுக்கொள்ளாமல் மிகவும்அச்சமுற்று நமஸ்கரித்துத் தேவரீரது தெய்வத்தன்மையைச் சற்றும்அறியாதபாவிகளாய்க்கண்ணொளியிழந்தோம்க்ஷமித்துக்கடாக்ஷிக்கவேண்டுமென முறையிட்டோலமி

டச்சுவாமிகள், கள்வர்களே இழந்த தனங்கள் வரக்கூடுமோவென நாங்கள் அறிவின்றிச் செய்த குற்றங்களைப் பொறுத்து எவ்வாற்றானும் இப்புலைஞரான எங்கட்குக் கண்கள் தெரியும்படி கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க நீங்கள் இதுகாறுங் களவாற் சம்பாதித்த பொருள்களுள் உமது சீவனத்திற்குச் சென்றது போகமிகையாய் நிற்கும் பொருள்களை முருகக்கடவுளுக்கு அர்ப்பணமாக உடன்படுவீராயின் கண்கள் விளங்குமாறு சுவாமி கடாக்ஷிக்குமென் றதைக் கேட்டுத் தாஞ்செய்தோமென்று பாதத்தில் வீழ்ந்து தெண்டனிட அக்கணமே அக்கள்வர் யாவர்க்கும் கண்கள் நன்றாய்த் தெரிய, சுவாமிகள் அப்பொருள்களைக் கொண்டுவருகவெனக் கட்டளையிட்டு வள்ளையாரோடையில் நீராடி நித்திய நியமங்கள் புரிந்து அப்பனங்காட்டை நோக்கி வருதலும் அதன் நடுவில் ஒரு பெண்பனை மூலத்தில் ஸ்ரீ சுப்பிரமணியஞ் சுயம்புவாய் முளைத்திருந் தருளியதைப் பார்த்து அன்று தொடங்கிச் சுவாமி சந்நிதியிற் சரணசம்பந்தமில்லாமல் தரிசனமாத்திரம் பெற்றுக்கொண்டு பிள்ளையார் கோயிலில் வசிப்பவராயிருந்தனர். அங்ஙனமிருக்க ஓர் தினம் முருகக்கடவுள் குமாரதேவரைப் போலெழுந்தருளக் கண்டு சிதம்பரசுவாமிகள் அச்சமுற்று அவரைத் தொடர்ந்து சென்று சரணஞ்செய்து நிற்க ஆசிரியர் நோக்கி நீ இவண் வசிப்பது எல்லையென உபகயற்கணம்மையருளிய அதலின் அணைப்பம் செய்ய ஆயின யாமருள் முருகக்கடவுளைத் தரிசிப்போம் வருகவென்று முன்னும் பின்னுமாகத் தொடர்ந் தணுப்போது சுவாமிகள் ஆசிரியரை நோக்கி சுவாமி இவ்வாலயம் எத்துணைவிசாலமும் நன்மையுமாக விருந்ததென்று கேட்டனர், அதற்கு ஆசிரியர் சிதம்பரசுவாமிக்கு நெற்றியிலே திருவெண்ணீறு சாத்தி நேத்திரத்தாற் பரிசித்து ஆலய அளவும் தீர்த்தத் திருவீதி முதலியவையும் பார்ப்பாயென்ன அவ்வாறு பார்க்குங்கால் ஆலயம் கெர்ப்பக்கிருகம் அந்தராளம் மஹாமண்டபம் சர்வவாத்திய மண்டபம் தேவியார் சந்நிதி மடைவளாகம் திருமதில் கோபுரவாயில் மயில்மண்டபம் துவஜஸ்தம்பம் பலிபீடம் பிராகாரம் வீதி மாடவீதி மடாலயம் தீர்த்தமுதலியயாவும் சிற்பநூலளவைப்படி அனந்த விசித்திரமாகவும் சிறப்பாகவும் விளங்கக் கண்டனர் ஆசிரியர் அவ்வாலயத்துட் புகுந்து முருகக்கடவுள் சந்நிதியிற் சிதம்பரதேவர்க்கு அநுக்கிரகித்து ஹராஹரா வென்றருளிய மஹாவாக்கியத்துடன் மூலஸ்தானத்திற் சுயம்புவாய் வீற்றிருக்குந் தன்மைத்

தாயைநோக்கியஞ்சலிமுகிழ்த்தாராயினர் அப்போழ்து முருக்கடவுளாகிய ஆசிரியரது திருவடிகளையெதிராகக்கொண்டு வடதிசையாய்ச்சாஷ்டாங்கமாகச்சரணம்புரிந் தெழுவதற்குமுன்ஆசிரியவுருவாய்வந்தருளியமூர்த்திதிருவுருக்கரந்தனர்-சிதம்பரதேவர் எழுந்துபார்க்கையிற்சுவாமிபனைமரமூலத்திற் பழையபடியேயிருக்கநோக்கியளவிலாதஆனந்தவசத்தராயதிசயித்தனர்.

ஸ்ரீ சுப்பிரமணியமேசிதம்பரசுவாமிகளது ஆசிரியராகியகுமாரதேவர்வடிவாயெழுந்தருளியநுக்கிரகம்புரிந்தாட்கொண்டபடியால்சுவாமியேதமக்குக் குருமூர்த்தமாகநின்றது அந்நாள்தொடங்கிச் சரணசம்பந்தம் நடந்துவருகின்றது-பின்பு,கலிவெண்பாவால்நெஞ்சுவிடுதூதுஎன்னும் ஓர் பிரபந்தமியற்றிவிருத்தகிரியின்கண் குமாரதேவர்க்கனுப்பிவிநாயகர்கோயிலில் வசித்திருந்தனர். அதனையறிந்த ஒருகுலாலன்பிள்ளைகள் அவ்வாலயத்தின்வடபாலுள்ளகண்ணுவப்பேடென்னுமூர்க்கருகிற்கீழ்ப்பால்நெடுநாளாய்நேத்திரந்தெரியாதிருந்ததமதுதந்தையைப்பார்த்துஐயா, மேம்படிவிநாயகர்கோயிலிலோர்பெரியவரெழுந்தருளியிருக்கின்றனர்அவரைச்சரண்புகின்உமக்குக்கண்தெரியும்படிசெய்தருளுவரென்ன,வயதால்முதிர்ந்தஅக்குலாலன் மைந்தர்சொல்லைநம்பி சுவாமிகளிடத்திற்சென்றுபிரதக்ஷிணநமஸ்காரஞ்செய்துபக்திபூர்வமாக வேண்டுகோள்செய்வதற்கு-சுவாமிகள் ஸ்ரீசுப்பிரமணியம் நீயெண்ணியாங்குக்கடாக்ஷித் தருளுமென்று சிந்தித்தவுடன் அவனுக்குக்கண்ணிரண்டும்தெரிந்தன அக்குலாலன்தேவரீர் இத்தலத்தினின்றும்அடியேன் சிறுகுடிலின்கண்ஒருபுளியமரமிருக்கின்றது அங்கெழுந்தருளிவசிக்கலாமென் றுபசரித்துப் பிரார்த்திக்க அன்றுதொட்டுஅம்மரநீழலில் வந்துஅகணிவளர்த்துக்கொண்டுவீற்றிருந்தனர் மற்றோர்நாள்திருப்போரூரையடுத்தவடகிழக்கிலுள்ளகாலவாக்கமென்னுமூரில்ஒருமுடவன்சுவாமிகளைதரிசித்துச்சரணமடைந்து * நெகிடியிற்பூத்த திருநீறருளப்பெற்றுக்கொண்டுபவித்திரனாகினான் இம்மகிமையைக்கேட்டவநேகர்தம்மைவருத்தியவெப்பநோய்-சூலைவயிற்றுவலி-மகோதரம்-காமாலை-குடல்வாதம்-குட்டம்-பெரும்பாடு-தலைவலிமுதலியபெருநோய்களை நிவிர்த்திசெய்துகொள்ளவேண்டியங்குவந்துவழிபட்டுவணங்கிச்சுவாமிகள்அருளியநெகிடி

* நெகிழி என்பது - நெகிடியெனமருவியது.

த்திருநீற்று மருந்தும்பெற்று அவ்வவ்வியாதிகளினின்றும்நீங்கிச் சுகமுற்றனர் இப்பான்மையோராற்சிலகாணிக்கைகள்சேர்ந்தன. அவற்றுடன் முன்சொன்ன கள்வர்கள்கொணர்ந்த திரவியமுதலியவற்றைச்சுவாமிகளிடத்திற்செலுத்தித்தாமும் அடிமையாயேவற்பணிசெய்துநின்றனர்.

அங்குள்ளகுடித்தனக்காரர்களும்,சான்றோர்களும்இம்மகிமையைக்கேள்வியுற்றுவந்துபிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்தெதிர்நின்று இவ்வூர்ப்பனங்காட்டில ஸ்ரீகந்தசுவாமிஆலயம் ஜீரணமாகிசுயம்புவாகியசுவாமிமாத்திர மிருக்கின்றது அதற்குப்பூசைபரிந்துகற்பூரஆராதனைசெய்யில் ஊர்பற்றிக்கொள்ளுகின்றது, அவ்வாறினிமேநரிடாவண்ணம் ஆலயஜீர்ணோத்தாரணம் செய்துநித்தியபூசைமுதலியவும்நடத்துவித்துஇவ்வெளியோங்களையும்காத்தல்வேண்டுமெனக்குறையிரப்பககருத்திசைந்துநாம்பரதேசியானதால் நம்மால் ஆவதென்ன அளவற்றநிதிவேண்டுமே ஆயினும் நமதுவேண்டுகோளின்படி அவைக்கு முயற்பெரியத்தொடங்குவல் நீவிர்செய்யுமுதவியாதெனவினவஎமதுபதியாகிய இக்கிராமத்தைஆண்டவர்பொருட்டுத்தந்திடுவதுமன்றிகடவுளுக்குவேண்டியஏவல்களனைத்தும்யாங்களேசெய்கின்றேமென் றுறுதியாயுரைத்திட, அங்ஙனம்இதுபோழ்தேசெய்யத்தொடங்குவீராயில் திருப்பணிமுதலியவற்றைநடத்தலாமெனவுரைத்தருளினர் அக்கணமேஊரார்செப்பேட்டில்வரைந்துதத்தஞ்செய்துகொடுத்துச் சுவாமிகளநுஞையின்படிநடத்துவரத்தொடங்கினர்

அன்னோருதவியாலுந்தரிசனார்த்தம்வந்தவர்களுதவியாலும்ஆலயத்திருப்பணியைநடத்தவேண்டிக கற்பகிருகம்செய்யத்தொடங்கியபோது முன்னர்க்கூறிய கிளியனூர்ப்பாதிரியிலிருந்த முதாட்டி-சுவாமிகள் கட்டளையின்படி (காணிக்கைசேகரித்துக்கொண்டுவந்துதரவேண்டுமென்றம்பவரிருந்துதனக்குப்பொருள் வருவாயின்மையால்அங்குள்ளசெங்குந்தர்நூலிழைக்கையிலும்பாகோடுகையிலும் புடைவைகள்நெய்வதிலும்நிலத்திற்சிந்துகின்றநூல்களைநாடோறுமெடுத்துச்சேர்த்துச்சிவபக்தியானத்துடன் கோவைசெய்து பின்புடுவாக்கிஅந்நூற்புடுவுகளைப்புடைவைநெய்வித்துவிற்றதில் ஒருபொன்கிடைத்தது ஓராண்டுகழித்து அதனைக்கைக்கொண்டங்கிருந்துதிருப்போரூர்சேர்ந்துசுவாமிகள்வீற்றிரு

க்கும் ஆச்சிரமந்தேடிவந்து தரிசனைபெற்று அப்பொன்னொன்றையுங்குருகாணிக்கையாகவைத்து வலம்வந்து நமஸ்கரிக்கச் சுவாமிகள் நோக்கியந்நாளளவும் இப்பெண்பால்மெய்வருந்திச் சம்பாதித்துக்கொணர்ந்து செலுத்தியபேரன்பினையுள்ளுவந்து அப்பொன்னைத்தமது திருக்கையிலேந்திச்சென்னியிலும் நெற்றியிலும் கண்ணிலும் தோளிலும் மார்பிலும்வைத்துவைத்தானந்தத்தாலாடி அதனைக்கற்பகக்கிருகத்தின் சிகரவேலைக்குபயோகித்தனர் அத்தருணத்திரிசனூர்த்தம் அங்குவந்திருந்தசெல்வைப்பாளையத்தாசெட்டியாரென்பவர் அவ்வற்புதத்தைக்கண்டு இரண்டுடையவராகன் கொண்டுவந்து சுவாமிகளுக்குமுன்னேவைத்து வணங்க அந்நிதியின்மேல்கண்ணோக்கஞ்செலுத்தாது எட்டுநாளைக்குப்பின்னர் ஒருவாறுள்ளந்திரும்பியிந்நிதியைத்திருப்பணிக்குபயோகித்துக் கொண்மினென்றேவலோர்க்குக்கட்டளையிட்டனர் அன்றியும் நாடோறுந்தரிசனத்திற்குவருகின்றவர்கள் செலுத்தும் காணிக்கைகளாகிய நிதியனைத்தும் அவ்வவர்களைக்கொண்டே சந்நிதானத்திற்சேர்த்து கெர்ப்பக்கிருகம் அந்தராளம்மஹாமண்டபம்மயில்மண்டபம் துஜஸ்தம்பம் பலிபீடம்இவற்றைநிறைவேற்றுவித்து மந்திரவிசேடமானயந்திரஸ்தாபனமுமியற்றிக் கும்பாபிஷேகமுதலியவும்நிறைவுறுத்துநித்தியபூஜைஆராதனையை நடத்திவந்தனர்

திருப்போரூர்த்தலந்தில்வசித்து-பிரகிர்தியுபாதைகளைவிசர்ச்சனஞ்செய்வதுதகுதியன்றென்றுகருதித்தாம்வீற்றிருந்த புளியமரத்தின்தென்கிழக்கில்தவஞ்செய்தற்கிசைவுள்ள ஓர்பரிணமியற்ற வெண்ணணிச் சரஸ்வதிகூடம் பூசையிடம்ஒடுக்கஉறையுள்இவற்றைநிருமித்து அதன்வடபாலிருந்த சிறுகுளத்தைத் தடாகமாக்கிஅதன்மேற்பாங்கில் மட்சுவரொழுப்பித் தட்டோடுமேய்ந்தஓர்குற்றாலயங்கட்டுவித்ததில்விநாயகப்பிரதிட்டையும்வேலாயுதபிரதிட்டையும் புரிந்துபிள்ளையார்க்குச் சுந்தரவிநாயகரெனத்திருப்பெயர்சாத்தித் தடாகத்திற்குவேலாயுததீர்த்தமெனப்பெயர்கூறினர். முன்னர்ஸ்ரீசுப்பிரமணியமூர்த்தியாலயத்திருப்பணிதொடங்கினநாள்தொட்டுத் திருப்போரூர்ச்சந்நிதிமுறையெனப்பெயரிட்ட ஞானநூல்பஞ்சாதிகாரவிளக்கமுதலியனநிலைபெறவியற்றி ஆசிரியிற்குமாரதேவர்முன்னிலையிற் சாந்தலிங்கசுவாமிகள் உபாயிரிகையென்றருளியவைராக்கியசதகமுதலியஎலலாநூல்களுக்கும்விருத்தியுரையுஞ்செய்து

பாதிரியம்மையார்க்கு அநுக்கிரகித்து ஞானம்மையெனத் தீக்ஷாநா
மந்தரித்துக் கட்டளையிட்டபடி அவர் பாளையத்தின் மேற்புறமார்க
த்திற்கு வடபாரிசத்திருந்த கயத்தைப் பெரியவாவியாக்கி யதற்கு
வற்றாநீர்க்குளமெனப் பெயர்புனைந்து அதன்கரைச்சார்பில் நந்தவ
னம் தண்ணீர்ப்பந்தர் இத்திருப்பணிகள் செய்துகொண்டு அதன்வ
டகரையில் ஆத்மார்த்தமாகச் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து பூசித்தி
ருந்தனர். ஒருநாள் ஞானம்மை சிதம்பரதேவரிடத்தில் வந்து நமஸ
கரித்து மாணிக்கவாசகசுவாமிகள் ஓதியருளிய திருவாசகத்திற் "புண
ர்ப்பதொக்க எந்தையெனை" என முதலெடுத்த பாசுரத்திற்குப்
பொருளருளிச்செய்தல் வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து ப
ன்னாள் தினந்தோறும் பிரார்த்தித்து வருகையில் ஒருநாள் சகமூர்த்த
அப்பனுவற்குப் பொருளுரைக்கலுற்று அவ்விறந்தவெட்டிலைமூத
இடங்கொடுத்துவளர்ந்து வருகையில் முருகக்கடவுள் ஆசிரியமூர்த்
தமாகவந்து அச்சவையருளியிப் பனுவல் சொல்லிய திருவாதவூரர் தி
ருவாசகத்திற்குப் பொருள் சொல்லாமல் சிற்சபையே யதற்குப்
பொருளெனக்காட்டியிருக்கவும் இப்போது நாயிட்டடங்குமோ
வெனத் திருவாய்மலர்ந்தருளலும் சிதம்பரதேவர் பெண்பால் வே
ண்டுகோளாலிவையிந்தவனை செய்யத்தொடங்கியதென்றிறைஞ்சின
ர். ஆயினும் அவ்வோர் பனுவற்குப் பதவுரையாகச் சொல்கவென்றுகூ
றிக் கடவுள் மறைந்தருளினர். ஆதலால் அவ்வோர் பனுவற்கு மாத்திர
ம் சிதம்பரசுவாமிகள் பதவுரையருளிச்செய்யக் கேள்வியுற்று அம்
மை ஆனந்தமடைந்து அகல்பின்னர் நெடுநாளிருந்து ஓர்வைகாசிப்
பௌர்ணமிக்கு அநுக்கிரகஞ்செய்து ஆரியர் கட்டளைமேற்கொண்டு
கிளியனூர்ப்பாதிரியென்னும் தலத்தை நன்னிதிஷ்டானுபவமெ
னப் பெயர்பெற்றதோர் சாத்திரமியற்றி நிஷ்டானுபூதியில் ஒடுக்க
முற்றனர். சின்னாளானபின் ஏகாலியம்மையும் ஒடுக்கமாயினர். இ
வ்விருவர் சமாதியும் அவ்வூரில் இந்நாளளவும் ஆராதிக்கப்பட்டுள்ளன.

இங்கு, சிதம்பரதேவர் அநந்தமான்மியங்களுடன் ஐம்பதாண்
டிற்குக் குறையாமல் வீற்றிருக்கையிற் சென்னைப்பட்டினத்திற்குப்
பக்கத்ராழிகைவழிச் சேய்மையில் மேற்றிசையிலுள்ள பூவிருந்தவல்
லியென்னும் ஊருக்கு நாட்கிடையான கோவூரில் துளுவவேளாண்மர
பிற்றோன்றிய திரிபுராந்தகமுதலியென்பவர் புத்திரரும் பூம்மலவில்
லாரயமுதலி தௌகித்திரருமாகிய சிவசங்கரரென்னும்பெயருள்ள

ஓர்சிறுபிள்ளையையிளமைப்பருவம்மேற்படுவதற்குமுன்னமேதிரு
ப்போரூர் முருகக்கடவுள்ஆட்கொண்டருளியவாறு அவர்சென்னி
யிற் சடையுற்பத்தியாகிமயக்கமடைந்தவர்போலவும்பித்துடைய
ர்போலவும்தெய்வங்கோட் பட்டார்போலவும் ஓடியும்பாடியுங்கூ
த்தாடியும் தீர்த்தங்களில்மூழ்கியும் விபூதியுத்தூளனஞ்செய்துப் இ
வ்வாறு கோலாகலமாவிருக்க அவர் தந்தை அவற்றினுண்மையையறி
யாமல்ஆயுள்வேதியனாகக்கொண்டுமணிமந்திர ஒளஷதமுதலியவற்
றைப்பிரயோகித்தும் அவைநீங்காமையால அக்காலத்தில ஜீர்ணோத்
தாரணமாகி விளங்கியுள்ளதிருப்போரூர்ச் சந்நிதியின்கடவுட்டன்
மையையும்சிதம்பரதேவர்மஹாத்மியங்களையும் பலரும்சொலக்
கேள்வியுற்றுத்தமதுபுத்திரருடன் திருப்போரூரடைந்துசுவாமித
ரிசனம்செய்துஇந்நியமத்திற் சின்னாள்ஒழுகியும்அவைநீங்காதிருந்
தமையாற்சிதம்பர தேவரிடத்திற்குச்சென்று வலம்வந்துபணிந்த
ஞ்சலிசெய்து புத்திரனையெதிரிற்கிடத்தி சுவாமிகளேஇக்குழந்
தைக்கு நேரிட்டபிணியை நிவிர்த்தித்தாளல்வேண்டுமென்று வருந்
தி முறையிட அப்பிள்ளையின்குறிப்படையுளுணர்ந்து தந்தையை
நோக்கிஅப்பாஇப்பிள்ளையையெடுத்துக்கொண்டுசந்நிதிக்குச்செ
ன்றால்ஆறுமுகம் துணைசெய்யுமென்றருளிச்செய்ய அவ்வண்ணம்
தந்தைகுழந்தையுடன்அங்கடைந்துஅபிஷேகமுதலியவைசெய்
வித்து-கற்பூராராதனைசெய்யும்போது முருகக்கடவுளைத்தோத்திர
ஞ்செய்யவந்நிலையில்அங்கிருந்தவருள்ஓர்சிறுவன்மேரில்கடவுள் ஆ
வேசமாகஇக்குழந்தையைநாமாட்கொண்டோமாதலால்உனதுபி
ள்ளையன்று நமது பிள்ளையாகுமிப்பிள்ளையை நமதுசந்நிதானத்
தில்விட்டிடக்கடவையெனக்கட்டளையிட அதுகேட்டவுடன்மனங்
களித்துத்தந்தைபுத்திரனைச் சிதம்பரசுவாமிகளிடத்தில் ஒப்புவித்
து விடைபெற்றுநீங்கினபின்பு வீரசைவவிதிப்படிசிவலிங்கதாரண
முதலியவற்றையநுக்கிரகித்துச் சிவசங்கரத்தம்பிரானெனப்பெய
ர்தந்துஓர்திருநீற்றுப்பையும்வேலாயுதமும்ஓர்தாம்பாளமும் பிள்
ளைகையிற் கொடுத்து குழந்தாய் நீயின்றுதொட்டு ஆலயத்திற்சென்
றுநின்றுபிச்சையேற்றுத் திருப்பணிகளை நடத்திவருகவென்று கட்
டளையிடப்பிள்ளை-சுவாமீஅடியேன்சிறியன் ஒன்றும்எனக்குத்தெ
ரியாதேயெனவிண்ணப்பஞ்செய்தலும் சிதம்பரதேவர் அப்பாஅ
ந்த வருவோர்களுக்கு ஆறுமுகம்துணையென்றுதிருநீறுதருவாயா

யின்திருப்பணிதானே நிறைவேறும் அது செய்கவென்று விடையளிக்க அதனைமேற்கொண்டு ஆலயத்திற்செல்லிருந் திடைவிடாமன்முயன்று திருப்பணிகளையும் பிரமோற்சவமுதலிய சிறப்புகளையும்நடத்திவந்தனர்.

பரிணமத்துட் பூஜாமடத்தின்மேல்பாற்கூடத்தொடுக்கவறையுள்வழியாகச் சுரங்கஞ்செய்வித்து அதற்குத்தெல் பால சமாதி உள்ளறைகட்டுவித்து அதிலே நாடோறும் சுவாமிகள் நிட்டைகூடியிருந்தது. சின்னாள்பின்னர் இடபரவிவிசாகபௌர்ணமியில் தாம் சமாதியில் நிரதிசயானந்தபரிபூரண நிலையிற்கலவாமற்கலந்திருக்க செவ்விவருவதுணர்ந்து அதற்கு முன்னாளாகிய சுவாதி நக்ஷத்திரத்திற்சிவசங்கரதேவரையழைத்தருளி அப்பா இதுமுதலினி ஆண்டுதோறும் இச்சுவாதிநாளில் இங்குமகேசுரபூசை செய்வித்துமறுநாளாகிய விசாகத்தில் ஸ்ரீசுப்பிரமண்யமூர்த்திக்கு மகாபிஷேகம் நடத்தி - சுவாமி திருமுகமண்டலவுயரப்பிரமாணம் திருப்பாவாடையில் சுத்தான்னமும் பருப்பு நெய் பால் தயிர் பதார்த்த பக்ஷண பலவகைகளும் படைத்து நிவேதித்து ஆராதித்துத் தெரிசித்துவரக்கடவையென்றும் மூன்றுநாள் இத்தலவிநாயகராகிய வெட்டபடிவிநாயகர்க்கு அபிஷேகம் நடத்தி (ஆண்டுதோறும் வைசாகபௌர்ணமியில் ஸ்ரீசுப்பிரமண்யசுவாமி மகாபிஷேகமுதலிய சிறப்புகள் நிர்விக்கினமாக நிறைவேறும்பொருட்டு நாட்பிரார்த்தனை செய்துகொள்ளும்படி) ஆயிரத்தெட்டுத் தேங்காய்களுடன் மகாநைவேத்தியமுதலியவும் நிறைவேற்றக்கடவையென்று அது தொடங்கிப் பிரணவமூர்த்தியாகக்கலாசநாதர் கோயில்முதலிய சந்நிதிகளுக்கு முறைப்படியபிஷேகாதிகள் செய்வித்துத்தரிசனம்செய்துவரக்கடவையென்றுங் கட்டளையளித்து அன்றுமகேசுரபூசையை நடத்திக்காட்டி மறுநாள்வைசாகபௌர்ணமியாதலால் மாணாக்கரை ஆலயத்திற்கனுப்பதும் மகாபிஷேகமுதலியவற்றைத் தமதுகருத்தின்படி நடத்த அவரவ்வாறு அங்குநண்ணி அச்சிறப்புக்களை நடத்திக்கொண்டிருக்கப் பரிணமத்தில சுவாமிகள் வேலாயுததீர்த்தத்தின் மூழ்கிச் சிலபூஜையாராதனைகளை முடித்து ஒடுக்கவறையுளின்கண் நிஷ்டைகூடியிருந்தது. இதுநிற்க.

ஆன்மாக்களுக்கு நினைக்கமுத்திதருவதாய் முன்னோர்காலத்திற் பரமசிவமே தழற்பிழம்பாய் வளர்ந்தோங்கிப் பல்லுகங்கட்குத்த

க்கவாறு மலைவடிவாய்விளங்கியிருக்கின்ற திருவண்ணாமலையிற்சோ
ணாசலதேவரென்பவர்தமக்கருணகிரிமூர்த்தியே குருவாய்வந்த
நுக்கிரகிக்கப் பெறவேண்டுமென்று வைராக்கிய விரதமேற்கொ
ண்டு முப்பதாவதுவயதுதொடங்கித் தொண்ணூறுவயதாகுமளவு
ம்நியமந்தவறுமற்கிரி பிரதக்ஷணஞ்செய்து வருகின்றவர் ஓர்தினந்
தின அடியண்ணாமலைக்கோயிற்புறத்துவரும்போது சிவபெருமான்
செயலால்தாகமிகுந்து மூர்ச்சையாயிட அண்ணாமலையார் ஓர்ஆதி
சைவராய்க்கலயத்திற் றண்ணீர்கொண்டுவந்து மூர்ச்சைதெளிவித்
து நீயிந்தித்தத்தையுண்டுசோபந்தவிர்தியெனவும் அடியேன் அ
ருபதாண்டளவாய் அண்ணாமலையார் குருவடிவாய்வந் தருள்வே
ண்டுமெனும் விரதத்தாற் கிரிவலம்வருகின்றேன் அதுகைகூடுமுன்
னா ஜலபானஞ்செய்யத்தக்கதில்லையென்றுறுதியாயுரைத்துமறுக்க
அங்ஙனங்கேட்ட ஆதிசைவவேதியர்கலியுகத்தில் அண்ணாமலையார்
குருமூர்த்தமாகவந்தருளிச்செய்வதியலாது ஆயினுமித்தலத்திற்
குக்குணதிசைக்கடற்கரைச்சாரலில் ஸ்ரீபிரணவசைலம்புறஞ்சூழ்ந்
துள்ளயுத்தபுரியென ஓர்புண்ணியதலமுள்ளது அதில்சிதம்பரதேவரெ
ன்றொரு பெரியவருளர் அவர்நாளதுதிங்கள்விசாகநாட்பௌர்ண
மியிற்பூரணதசையடையவுள்ளார்அதற்குள் அங்குச்சேர்வையாயி
ன் அவரால்கோரியபடிகுருபதேசங்கிடைக்குமென்று கூறிமறைந்
திடச்சோணாசலதேவர் இக்கண்டவடிவஞ்சிவபிரானேயென்றுணர்
ந்துறுதியாநிந்து ஜலபானஞ்செய்து அந்நிலையேதாழ்க்காமல்வழிக்
கொண்டு மலைகாடுயாறுள்ளனகடந்துதிருப்போரூரில்விரைந்துவ
ந்து(இங்ஙனம்நடந்தவாறுஞானநோக்காலறிந்துதமதுவரவுபார்த்
திருந்த) சிதம்பரசுவாமியைத்தேடித்தரிசித்துவலம்வந்துசரணம்
செய்யச் சுவாமிகள்நோக்கி நீவிர்யாவரெனவினவலுஞ்சோணாசல
தேவர்.

நேரிசை வெண்பா.

எடுத்தசனனங்கடொறு மீன்றெடுத்ததாய்மார்
கொடுத்தமுலைப்பாலனைத்துங் கூட்டில்- அடுத்துவளர்
பன்னகணைத்துயிலும் பாலாழியுஞ்சிறிதா
மன்னுசிதம்பர தேவா.

நெடிலடிவிருத்தம்.

நவகுணமுருக்குறும்பு நவைகளைமற்றனைத்துந்தீர்ந்து ... ...*
பவகுணஞ்சற்றுந்தாக்காப் பரமயோகிகளாய்நின்ற............*

சிவகுணச்செல்வர்போற்றுஞ் சிதம்பரதேவாவென்ற... ... ...*
அவகுணம்போக்கியாள்வ தையநின்கடனதாமால் ............ *

என்றிங்ஙனம்சொல்லித்துதித்துவணங்கச்சுவாமிகள்கிருபை கொண்டுஅவர்கோரியதைஅநுக்கிரகஞ்செய்தனர்பின்னுஞ்சோணாசலதேவர்.

கழிநெடில் விருத்தம்.

யானெனல்காணேன்பூரணவறிவின் யாதினுமிருந்தபேரொளிநீ*
தானெனநிற்கச்சமத்துறவென்னைத் தன்னையுணர்க்கவுந்தருங்காண்*
வானெனவயங்கிநின்றவைம்பூத மார்க்கமாநெறிதந்துமாறுத்...*
தேனெனருசித்துளன்பரைகலந்த செல்வமேசிவபெருமானே*

என்று தோத்திரம்செய்தனர். அப்போழ்து சிவசங்கரதேவர்ஆலயத்தில்மகாபிஷேகாதிகளைநடத்தித் தீபாராதனைக்குச்சிதம்பரசுவாமிகளை யெதிர்பார்த்திருந்தபடி வாராமையால் அதனையும்நடத்திவருகையிற்பரிணமத்திற்சுவாமிகள்சோணாசலதேவரைநோக்கி-அப்பா,யாம் நிரதிசயாநந்தசமாதிபுகுகின்றனம் இக்கற்பலகையால்வாய்தலைமூடித் தளம்படுத்துநமதுசிவசங்கரத்திற்குஇதனையறிவித்தவனதாராமையைத் தீர்த்துஎமது வேண்டுகோள்தவறுமற்சொல்லியாங்குநடத்திவரும்வண்ணம் ஸ்ரீஷண்முகமூர்த்திதுணைசெய்யுமென்றுதெரிவித்துப்பின்னர்நின்னூர்க்குப்போதுகவெனப்பணித்து அக்கணமே தமதுபூஜாதிரவியங்களுடன்நிலவறைவழியாகச்சமாதிஸ்தானத்திலிறங்கிஒடுக்கமுற்றுநின்றது அச்சமயம்முருகக்கடவுள்சந்நிதியிற்கற்பூரதீபாராதனைநடந்துவரும்வேளையாகவாற்சிதம்பரசுவாமிகள்ஆண்டவர்சந்நிதியில் அஞ்சலியஸ்தராய்த்தோன்றிமூலஸ்தானத்தில் மறைந்திடக்கண்டுசிவசங்கரமூர்த்தியும்ஆலயத்திலிருந்தவேதியர்முதலியபலரும்அற்புதமும்அச்சமும்ஆநந்தமுமுற்று ஹரஹரவென்கிறவாக்கிய முழக்கத்துடன் நமஸ்கரித்துப்பரவசராயினர். சிவசங்கரதேவர் ஆண்டவர்கைங்கரியங்களில்மற்றவையுந்நிறைவுறுத்திப்பரிணமத்தைநோக்கிவருகையில் ஏவலாளர்சிதம்பரசுவாமிகள் பூரணதசையி லமர்ந்தமுறைமைகளைச்சொல்லக் கேள்வியுற் றடங்கரியஆராமைமேற்கொண்டுபூரணைத்தவசத்தராய்க்கண்ணீராறுயோடித்ததும்ப உள்புகுந்து ஆசிரியரொடுக்கமுற்றசந்நிதியின்றுஇவ்வாறுசொல்லத்தொடங்கினர்.

## கழிநெடில்விருத்தம்.

இக்கலியுகத்திலெழுந்தவெல் குருவே யின்பமேயன்பி து
றைந்த, முக்கனிரசமேமுதிர்சுவையமுதே முதறிவேமறைப்பொ
ருளே, சர்க்கரையொடுகற் கண்டெனருசிக்குந் தயாளுவேதமிய
னென்றனக்குத், துக்கசாகரத்தைத்தொலைத்தருள்புரிந்தாய் தூய
நீயெங்கொளித்தனையே ................. ....... .............. (க)

தாழ்விலாப்பொருளேதனிமுதலான தயாளுவேதற்பரவடி
வே, வாழ்வினிற்சிறந்தவதுலமெய்ஞ்ஞான வாரந்தவமுதமேயடி
ப்போர்க், கேழ்வினைப்பிறவியிடர்களைந்தளிக்கு மின்பமேயெளி
யனேன்றனைச், சூழ்வினையனைத்துந்தொலைத்தருள்புரிந்த துணை
வநீயெங்கொளித்தனையே ........ .......... . ............... (உ)

இத்தலத்தினின்னிணையடியடைந்தோர்க் கின்பமேயன்பி
னிதுறைந்த, மெய்த்தவக்கொழுந்தே விளங்குமாரமுதே வேத
வேதாந்ததேசிகனே, சித்தமுண்மகிழ்ந்தென் சென்னவெம்பகை
யைச் சிதைத்திடச்சிறியனேன்றனக்குச், சுத்தமெய்ஞ்ஞானசுகம
ளித்தாண்ட சுகிர்தநீயெங்கொளித்தனையே.....................(ங)

அன்பினர்க்குரிய வங்கையிற்கனிபோ லமர்ந்திடுமமுதமே
யெவையுந், துன்பெனக்கரந்ததோன்றலேதுணையே தொகுத்திட
ற்கரியவான்பொருளே, மன்பதைக்கெல்லாமருளுநற்பரமே மா
தவவடிவமேயடியேற், கென்பிறப்பிறப்பைத் தவிர்த்தருள்புரிந்த
வெற்றைநீயெங்கொளித்தனையே ..............................(ச)

பத்திமைபுரியப்பரிந்தெனையழைத்துப் பணித்துவாவென
வெனக்கினிய, பத்திகளுரைத்துப்போகெனவிடுத்துப் புன்மை
யென்றன்மையையறிந்து, நித்தியநிமல நிட்களநிறைவே நீணிதி
யேயருட்குருவே, முத்தியங்கடலேமுழுமறைப்பொருளே முத
ல்வநீயெங்கொளித்தனையே.......... ........ ...... ..........(ரு)

ஐயனேயருளாலடியனையாண்டிங் கருட்குருவென்னவீற்றி
ருந்த, துய்யனே துணையேதோன்றலேநிறைந்த சுகக்கடலமுதமே
யெனையிவ், வையமீதிருத்திவடிவினைமறைத்த வண்மையையறிகி
லேன்தமியேன், றுய்யுமாறருள்வாய் சிதம்பரதேவேயோவெனவு
ள்ளறைந்தழுதார்........ ................................... (சா)

உடனேசோணாசலதேவரோடிவந்தழைத்துக்கொண்டு போ
ந்துசனத்திருத்தியாரானமையை யொருவாறாற்றிச்சுவாமிகள்கட்

டளையிட்டமுறைமையை விண்ணப்பஞ்செய்து அமுதருத்துவித்துத்தாமும் அமுதுகொண்டுவிடைபெற்றுத் திருவண்ணாமலையிற் சென்றிருந்தனர்.

## இரண்டாவதுபட்டம்

## சிவசங்கரதேவர்*சரித்திரம்.

திவ்யதேஜோமய அகண்டபரிபூரண சச்சிதாநந்தசொரூபாரூபவராய்ச் சிதம்பரசுவாமிகளாதீனத்திலிரண்டாவது ஆசிரியராயெழுந்தருளியசிவசங்கரதேவர்-திருப்போரூர்ச்சந்நிதியில்திரணைமாளிகையும்உட்பிரகாரமண்டபமுந்தெய்வயானைநாச்சியார் சந்நிதியும்அதன்திரணைமாளிகைமண்டபமும்முன்னர்ச் சிதம்பரசுவாமிகள்கட்டளைசெய்திருந்தபடிஆண்டவர்தரிசனார்த்தம் வருபவர்களுக்குத்திருநீறளித்துச்சேகரித்ததிரவியங்களைகொண்டுசெய்வித்துப்பின்புதிருமயிலையிலிருந்தபூம்பாவைவேலப்பமுதலியாரென்பவர் புத்திரபாக்கியம்வேண்டித் தம்மைச்சரணடையக் கிருபாநோக்கஞ்செய்துஆறுமுகந்துணைபுரியுமென்றுதிருநீறளித்தருளப்பெற்றவாறு உண்டானபுத்திரனுடன்தம்மிடத்திற்குவந்து தரிசித்துத்தெண்டனிடக் - குழந்தைவந்ததாவென்ன-வந்ததுசுவாமியென்று புத்திரனைக்காண்பித்துவணங்க-அதற்குக்குமரகுருநாதனென்றுபெயரிட்டுத்தந்தையைநோக்கி யிவ்வாலயத்தில் இருபத்துநாற்கால்மண்டபமுங்கோபுரமுங்கட்டுவிப்பையென்றுகட்டளையிடக், களிகூர்ந்து, கோடியுருத்திரர்பூஜைசெய்துவரம்பெற்றதிருக்கழுக்குன்றத்தந்நாளி லெழுந்தருளியிருந்த பேரம்பலசுவாமிகள்முன்னிலையில் இருபத்துநாற்கால்மண்டபமுங்கோபுரத்திற்கு அடிப்படையும்அமைத்துக கருங்கற்பணிவிடையைநிறைவேற்றுவித்தனர் அஃதவ்வளவில் நிற்றது. அதன்பின்சரவணதீர்த்தமென்கிறவள்ளையாரோடையை நாற்சதுரப்பெருந்தடாகமாக்கிக் கருங்கற்படிக்களைகட்டுவித்துப்பிரணவசைலமென்னும் திருப்போரூர்மலைமேற்சிறிதாயிருந்தஸ்ரீபாலாம்பிகைசமேதியாககைலாஸநாதர்ஆலயத்தைத்திருமயிலைத்தையலையகமுதலியாரால்விசாலமாகவியற்றுவித்துக் கும்பாபிஷேகமுதலியவைநடத்திச் சிவாலயத்தில் திரிகாலபூஜைகள்எக்காலமும்நடக்கும்பொருட்டு இள்ளலூர் இடையன்குப்

யம்என்னும் இரண்டுசுரோத்திரியகிராமங்களையும் அம்முதலியார்தான மாகக்கொடுக்கஏற்றுத்தேவகாரியங்களைநடாத்திவந்தனர்.முன் சிதம்பரசுவாமிகள்-சாந்தலிங்கசுவாமிகளியற்றியகொலைமறுத்தலென்னும்நூலுக்குஉரையிட்டகருத்திற்கேற்கத்-திருப்போரூரிலுள்ள பிடாரிமாரியம்மைமுதலியதேவதைகட்கு ஜீவஹிம்சையாகியபலிகள்யாதொன்றுஞ்செய்யக்கூடாதென்றும் அலைக்குப்பதில் உழுந்துதெங்கங்காய்முதலியவற்றாற் பூசிக்கத்தக்கதென்றுங் கட்டளைசெய்துஅதுமுதலவ்வா றாட்சிசெய்துவந்தனர்.ஒருநாள்கோவளம்நவாபுமருமகன்சிலருடன்திருப்போரூரொக்கலையிலார்சோலையுள்வந்திருந்தோராட்டைச்சேதிக்கயத்தனித்ததைச் சிவசங்காதேவர்தெரிந்து இத்தலத்திலஜீவவதைசெய்யககூடாதென் றேவலாளைகொண்டுதடுத்துவிட்டனர்.அதுபொறாமல் அவர்கள்போய்நவாபுஇடத்திலமுறையிட்டுக்கொள்ள அத்தலத்தின்மகிமையைதன்குவிசாரியாமல சுவாமிகளைப் பிடித்துக்கொண்டுவரும்படி அமல்தாரனுக்குக்கட்டளையானவுத்தரவனுப்ப அவன்சமயம்பார்த்திருந்தழைத்துககொண்டுபோகஅதிகாரியொருசிறைப்புறமாகியமேன்மாளிகையிற்காவற்படுத்தினன்.அச்செய்தியறிந்தபக்கத்திலுள்ள கிராமத்தார்களுட்சிலவிவேகிகள்,அதிகாரி, சுவாமிகளைஹிம்சையெதாவதுசெய்வானோவென்றச்சுற்று அங்ஙனட்பிராணனைஅவன்கையிற்போக்கடித்துககொள்வதிலும்சுவாமிகளே ஒடுக்கமாகுதலுத்தமமென்றெருசீட்டுவரைந்து ஓர்பாத்திரத்திலிட்டுத்தாகத்திற்கனுப்புதல்போலொருமுதிஞர்வசத்தனுப்பககாவற்சேவகருத்தரவின்பேரில் அப்பாத்திரத்தைச் சுவாமிகளிடத்திற்சேர்த்துச்சங்கதியையுபாயமாத்தெரிவித்தலும் அதிலிருந்தசீட்டையெடுத்துப்பார்த்துக்கொண்டுபாத்திரத்தையவ்விருத்தர்வசங்கொடுத்தனுப்பிவிட்டுத்தருணம்பார்த்துப்பிராணத்தியாகஞ்செய்யயத்தனித்துஅக்காவல்மேடைச்சுவரிலிருந்த சிறுசாளரவழியாய்த்தாவியச்சுவர்ப்புறத்துத்தரையில்வீழ அத்தரைமுட்புதராலுந்தாழைச் செறிவினாலுந்நிறைந்திருந்ததால்முட்களாற்புதைந்துதிருமேனியிற்காயங்களாகியுபத்திரவமுற்றும் ஆண்டவராருளாற்பிராணனல்நீங்காமல் தேகோபாதைகட்குநிர்லக்ஷியமாகஆறுமுகம்துணையென்றுசொல்லிக்கொண்டு மேற்றிசைநோக்கிஅன்றுகாரமின்றிநடந்துயாறுகுன்றுகாடுகள்கடந்து ஆறுகாடென்னுப்ஷீடாரண்யப்பதியிற்சேர்ந்துதமது

திருமேனியிற்றைத்தமுட்களையெல்லா முபாயமாகப்பறித்தெறிந்து அப்பதியின்வடபால்வருகின்றபூவிநதியின் மூழ்கிச் சிவபூஜையைமுடித்து அந்நதிதீரத்திலோர்விருக்ஷநிழலில்வீற்றிருந்தனர், இது நிற்க.

கோவளத்திற்சிறைச்சாலையிற்காவற்படுத்திய தம்பிரானைக்காணாமற்காவலாளர் அங்கங்குந்தேடியுழல ஸ்ரீ சமரபுரிமுருகக்கடவுள் சிவசங்கரதேவரைப்போ லுருக்கொண்டவ்வூர் நவாபுமனைவிநித்திரைபோகும்போ தவள்கனவிலகாவற்புறத்திலிருந்து வந்தாற்போலத்தோன்றியவள்வயிற்றில் வேலாயுதத்தாற்குத்திமறைந்திட அந்நிலையேயவட்குவயிற்றுவலியுண்டாய்த் திடுக்கென்றெழுந்துமதிமயங்கிநடுங்கி நோய்சகிக்கமாட்டாமற் கோவென்றுகூச்சலிட நவாபுமுதலியோர்கள்கேட்டுவந்துபார்க்க நவாபுதன்மனைவியைநோக்கி ஏனழுகின்றனையென்ன நீர்சிறைக்களத்திற் காவற்படுத்தியிருந்தவொருகாவித்தம்பிரான்எனதுகனவில்வந்து அம்பினால்வயிற்றிற்குத்திப்போய்விடக்கண்டுவிழித்துக்கொண்டேன் அதுவயிற்றுவலியாகத்தலைப்பட்டுபாதிக்கின்றதென்னாற்பொறுத்துமுடியவில்லையென்றலற- நவாபுதிடுக்கிட்டுநெட்டுயிர்ப்பெறிந்துநீ அத்தம்பிரானைக்காட்டவல்லையோவென்ன-இதுசெய்தது காவலிலிருந்ததம்பிரானேயெனவற்புறுத்திச்சொல்ல அக்கணமேதம்பிரானைக்காவல்விடுவித்துக்கொணர்கவென்றேவலாளர்க்குரைக்கஅவர்கள்தம்பிரானைத்தேடிக்காணாமல்திகைத்துநவாபுக்குத்தெரிவித்தனர்.

அக்காலத்தில் ஆறுகாட்டுநவாபுமனைவிசொற்பனத்தில்முருகக்கடவுள்தோன்றிஅவளிடப்பாரிசத்தில்வேலாற்குத்திமறைய அதுசூலைநோயாகிவருத்தத்துண்ணென்றெழுந்துபயந்து பதைபதைத்துநோய்கணந்தோறு மேலிட்டுச்சகிக்கக்கூடாமற்பெருங்கூச்சலிடக்கேட்டுத் தனதுதலைவனான நவாபு முதலியவர்களோடிவந்து தான்படும்பாட்டைப்பார்த் தநுதாபப்பட யாரோவொருகாவித்தம்பிரான்எனதிடப்பக்கத்தில அம்பாற்குத்தினதுபோலச்சொற்பனங்கண்டேன் அதுசூலைநோயாய்நேரிட்டுவருத்துகின்றதென்னாற்சகிக்கவசமில்லையென்றலறினள் நவாபுஆச்சரியமுமச்சமுங்கொண்டப்பதியிலுள்ளபண்டிதர்கள் மாந்திரிகர்கள் பக்கீர்கள்முதலோரைவருவித்துத்தொடுத்தமணிமந்திரஔஷதங்களாலொருபலனுங்கிட்டாமல்நோயதிகப்பட்டது. அவர்கள்ஐயா இது வியாதியைச்சேர்ந்

தன்றுபிஷ்விருனியபைசாசபிரயோகமுமன்றூயின்தெய்வத்தா லுண்டானதாய்க்காணப்படுகின்றதென்றுயோசித்துச்சொல்லினர். நவாபுமனைவியைப்பார்த்து அத்தம்பிரானைக்காண்பிப்பையாக வென்ன இப்பதியிலுள்ள காவியுடைதரித்துள்ளவர்களையெல்லா மென்முன்கொணர்வீராயின் கண்டுகொள்வேனென்றாள். உடனே சேவகர்களைத்திசைதோறும் உய்த்தவவூரிலுள்ள அத்தன்மையோர் யாவரையும்வருவித்து ஒவ்வொருவராகக்காண்பிக்கையில் இவரல்ல ரிவரல்லரெனப் (பக்குவதசையினர்கருவிகளைநியதிபண்ணுமாறு) நியதிசெய்யப்பின்பு ஆற்றங்கரையில்வீற்றிருந்தசிவசங்கரசுவாமிக ளைச்சிலர்கண்டுபத்திமையன்புடன்பிரார்த்தித்தரசன்பாற்கொணர்ந்து மனைவிமுன்னர்விடுத்தனர் இன்றோ எனைக்குத்தினவீ போல்கின்றனரென்றுகூற இப்பரதேசிநமதுபெருங்காவலுக்குள் வருவதென்பதும் மனைவியையம்பார்க்குத்தினதென்பதும் ஒருவரா ற்றுனும்நம்பத்தக்கதன்று ஏதோ தெய்வத்தன்மையால்விளைந்த செயலேயன்றிமற்றதால்நடந்திராது ஆதலால் இவர்மேற்சுமத்துவ துநம்பாற்பிழையேயாமெனமதித்துநவாபு அன்புடனேசுவாமிக ளைநோக்கிப்பெரியோரே இஃதுயாதுகாரணத்தானேரிட்டதென க்கேட்கஐயா-யாம் ஒன்றும் அறிந்திலோம்யாமிருப்போருமொன் றும்தேவஸ்தானதர்மகர்த்தாவாயிருக்கின்றனம் அதனெல்லைக்குள் நமதுபெரியோர் அநுஞையின்படியாதொருஜீவவதையும்செய்ய ப்படாது,அப்படியிருக்கக்கோவளம்நவாபுமருமகன் சிலருடனங் குவந்திருந்தோராட்டைச்சேதிக்கயத்தனித்தானென்று முன்நடந் தவெல்லாம்முறையேசொல்லிநாம் இவண்வந்துஆறுநாளாயிற்று. அங்கு இத்தனைநாளாய்ப்பூசையுமில்லை, நமக்குஅன்னுகாரமுமில் லை. நுமதுமனைவிக்குப் பகவத்சங்கற்பத்தாலிந்நோய் சம்பவித்த தாகத்தோன்றுகின்றதென்றனர்.

நவாபு, பெரியவரோநீர்சொல்வதுண்மைதான்.இப்பெண்ணு க் கிப்போது நேரிட்டவுபத்திரவத்தைத் தீர்த்துவிட்டாலுங்கட்கு வேண்டியவெல்லாம்தருகின்றனமென்றிரங்கிக்கேட்க அதற்கிசைந் தவராய் ஆறுமுகம்துணைசெய்யுமென்றோதித் தந்தருளிய திருநீற் றைக்கையிலேந்தியுட்கொண்டுநோய்நீங்கி மனைவிநித்திரைசெய்ய ச்சுவாமிகள்விடைகொண்டுமுன்னிருந்தவிருக்ஷநிழலி லெய்தியது பின்னரும்முருகக்கடவுள்முன்போலவந்து வேலாற்குத்தினதால்

மீண்டுவந்த நோயின்வருத்தம்பொறாமல் தன்தலைவனையழைத்து முன்னைநீறுகொடுத்தபெரியவருக்குவேண்டுவதொன்றுமிதுகாறும்கொடுக்கக்கருதினீரில்லையாதலால் மறுபடியும்முன்போற்கடுகண்டுநோயுழக்கின்றனன் அதுமுன்னையினுமதிகரித்துவருத்துகின்றதெனக்கதறினன். நவாபுமிகவும்பயந்துதனதமைச்சர்முதலிய அதிகாரப்பெரியவரைவருவித் தாசனத்திருத்துவேண்டுகோள்செய்துநீவிர்கேட்டவையாவும்இந்நிலையேதரத்தடையிராதென்றுறுதியாயுரைக்கச்சுவாமிகள்நமதுதிருப்போரூர் ஆண்டவர்பூசைப்படித்தரவுற்சவாதிகைங்கரியங்கள் எப்போதுங்குறைவின்றிநிறைவேறக்கிராமசுரோத்திரியங்கள்தரவுடன்படுவீராயின் ஆறுமுகக்கருணைபுரியுமென்ன அரசன்மிக்கமகிழ்ச்சிறந்தவனுக்குத்திருப்போரூர்தண்டலம்இவ்விரண்டுஞ்சுரோத்திரியமாகத்தாலபத்திரஞ்செப்பேட்டிலெழுதிக்கொடுத்தனனாக, சுவாமிகளன்புகூர்ந்து ஸ்ரீஷண்முகமூர்த்தியைத்தியானித்துத்திருநீறளிக்க அதனைஅரசன்பத்தியுட்கொண்டுஅகக்கொடுநோய்பற்றறநீங்கிக்களித்திருந்தனன்

அதுகண்ட அரசன்மகிழ்ந்தவிசிறந்துசுவாமிகட்குச்சிவிகைகவிகை யானைகவரிஆலவட்டம் கோசிகப்பொற்படாம் அருகுதீவட்டி முதலியசன்மானமும்சிவிகைசுமப்போர்கட்கு ஆவேதனமாகஉப்பளங்களும்சுவயாதீனம்பண்ணி-திருப்போரூர்தண்டலமிக்கிராமங்களில்களவுசண்டைமுதலியவற்றைவிசாரணைசெய்துதீர்மானிக்க அதிகாரமேன்மையும் அங்கீகரிக்கும்படிவேண்டிக்கொண்டு கோவளம்நவாபுவுக்குமுத்தரவனுப்புவிக்க அங்கிருந்துசிவிகையில்ஆரோகணித்துவைதிகஆடம்பரங்களுடன் ஸ்ரீசமரபுரியடைந்து ஆண்டவனைமனமொழிமெய்களால வணங்கித்தரிசித்து-பரிணமத்திற்குவந்துஅமுதருந்தித் தொன்மைப்படியேசுவாமிகள்வீற்றிருந்தது.

அந்நாள்வரையிற்கோவளஅதிகாரிமனைவிக்குவயிற்றுவலிநிவாரணமாகாமலிருந்தது ஆறுகாட்டுநவாபுவினிடத்திருந்துவந்தகட்டளையைக்கண்டுபயந்து இவ்வண்ணம்கடவுளாக்கினையால்விளைந்ததென்றுள்ளுணர்ந்து நவாபுதிருப்போரூரடைந்துசிவசங்கரதேவரைக் கண்டுகொண்டுதன்மனைவிகனவுகண்டுவயிற்றுவலியடைந்திருக்கிற செய்திகளைச்சொல்லித்தனக்குவந்தகட்டளையையுங்காண்பித்துசுவாமிகளைச் சிவிகையாரூடராயழைத்துக்கொண்டு கோவளம்

போத்துஅந்நோயாளியைக்காட்டிவேண்டிக்கொள்ளச்சுவாமிகள் தேவாலயத்திற்கும்பாபிஷேகஞ்செய்ய வேண்டுவதாகையால்அதனைநிறைவேற்றத்தசகவுசவிபுரிவீராயின் ஆறுமுகம்நிவிர்த்திசெய்யுமென்ன அதற்குடன்பட்டுப்பிரார்த்தித்தபோது ஆறுமுகம்துணையென்றுகொடுத்தவிபூதியைவாங்கியுட்கொண்டவளவில்நோய்நீங்கிச் சுகமுற்றமனைவியுடன்களித்திருந்துமுன் சொல்லியபடி தக்கவாறுவேண்டுமுதவிகள்செய்யக் கும்பாபிஷேகத்தைநடத்தி அதுமுதல் ஆண்டவர்திருப்பணிகளைநிம்மதியாய்ச்செய்துவருங்கால்-குத்தம்பாக்கம் முத்துமுதலியாரென்பவரால் தேர்நிலைமண்டபமும்சத்திரமும்கன்னிகைப்பேறுநயனப்பமுதலியாரால்தடாகம் உண்டாக்கிவேட்டர்பறிமண்டபமும்சத்திரமும்கட்டுவித்து,பைகொநல்லாசெட்டியாரால்மாடவீதி யீசானதிசையில்சத்திரமும்தடாகமுமமைற்படுத்தியது இவற்றுடன்வைசியர்செங்குந்தர்சேனைத்தலைவர்யாதவர்வன்னியர்சான்றார் கழியர்செம்படவர்வண்ணார் இவ்வகுப்பினரைஆண்டவர்வருஷோற்சவ உபயகாரராக்கி அவரவர்க்குமடங்கட்டிக்கொள்ளவேண்டுவனவாகியநிலங்களும்விட்டுத் தேர்வாகனாதிகளுஞ்செய்வித்து ஆறுகாட்டுநவாபுவிடத்திலிருந்துசிலவிசேஷங்களைப்பற்றியுத்தரவும்வரக்கொண்டு அப்பால்திருமயிலைக்கபாலீசர்கோயில் தருமகர்த்தர்வேலப்பமுதலியார்சிங்காரவேலர்கோயில்தருமகர்த்தர் முத்தையப்பமுதலியார் இவர்களதுநன்முயற்சியாலும் முருகக்கடவுள்திருவுளப்பாங்கினாலும் பூவிருந்தவல்லியென்னுமூரார்சலத்துக்கிவ்வளவென்று மேறை-பிச்சையாகக்கொடுக்கும்படிசம்மதித்தவெப்போதும்அதுநடந்துவரத் தேவஸ்தானத்திற்குத் தானபத்திரமும்தரவாங்கிவசித்திருந்தது.

கம்பாநதிசூழ்ந்துள்ளதும் பார்வதியாரதுதிருமுலைச்சுவடும் வளைத்தழும்புமுற்ற திருவேகம்பமென்பதும் சப்தபுரியுள்மிக்கதும் பன்னிருபெயருள்ளதுமாகியகாஞ்சியில ஓர்வேதியப்பிள்ளைக்குமுருகக்கடவுள் சொற்பனம்சாதிக்கத்திருப்போரூரணுகிச் சிவசங்கரசுவாமிகளைத்தரிசித்துத் தனதுசொற்பனநன்மைகளை விண்ணப்பஞ்செய்து பணிவிடைபுரிந்துகொண்டு நாற்கேள்விமுயன்றுவருங்காற்சுவாமிகளுக்குப்பூரணதசையணுகினதுதேர்ந்துவீராகமவிதிப்படி அப்பிள்ளைக்குசிவலிங்கதாரணஞ்செய்து ஞானபூதியநுக்கிரகித்துஆசாரியவபிஷேகத்துடன் முத்துக்குமாரத்தம்பி

நாளென்றுதீக்ஷாநாமமுந்தந்து சந்நிதானத்திற் பட்டாபிஷேகமு
ம்புரிந்து ஆண்டவர் கைங்கரியங்களை நாடோறும் விருத்தியாய்நட
த்திவரக்கடவையென்று கட்டளையிட்டு நிரதிசயாநந்தநிஷ்டாநு
பூதியிலொடுங்கினர்.

## மூன்றாவதுபட்டம்

# முத்துக்குமாரசுவாமிகள் சரித்திரம்.

அகண்டாகாரதேஜோராசியானபரமானுபவராயெழுந்தரு
ளியமுத்துக்குமாரசுவாமிகள் சர்வவாத்தியமண்டபமூலவறை மூ
ன்று வள்ளிநாச்சியார் சந்நிதானம் அடுத்தமண்டபமேடை இத்திரு
ப்பணிகளைமுற்றுவித்துமுன்கூறிய குமரகுருநாதமுதலியாரென்
னும் நவாபகுழந்தைமுதலியாரால்சிவசங்கரசுவாமிகள்நாளில்அடி
ப்படைகருங்கற்பணிமாத்திரத்தில் நின்றிருந்ததிருக்கோபுரமேனி
லைகளையுங்கட்டுவித்ததுபின்னர் ஆரியத்திலும்திராவிடத்திலும் ஆறு
சாத்திரங்களும் பதினெண்புராணங்களும் இருபத்தெட்டாகமங்க
ளும் இருநூற்றிருபத்துநான்குஉபாகமமுதலியபல ஞானநூல்க
ளுஞ்சேகரித்து அவற்றைமிருத்தியஞ்ஜெயசாஸ்திரியென்பவர் மு
ன்னிலையில் ஆராய்ச்சிசெய்து வடமொழிதமிழ்ஆந்திரம் இவற்றாற்
சிலநாடகங்களியற்றி ஆலயத்தில்நவராத்திரியுற்சவத்தில்அதுகள் ஒ
ன்பதுநாளிலும்நடக்கும்படிசெய்வித்தவாறு அந்நாடகங்கள் நா
ளதுவரையில்மகாநவமிதோறும் தேவகணிகையர்களால் சந்நிதியி
ல்நடத்தப்பட்டுவருகின்றன.

அக்காலத்திலஇதற்குச்சற்றேறக்குறைய-எய-வதுவருஷத்திற்
கு முன்-மைசூரைச்சார்ந்த சீரங்கபட்டணத்தைத்தன்வசப்படுத்தி
யாண்டிருந்த ஹைதர்என்னும் அரசனொருவன் இந்நாடுகளிற்கலகம்நேரி
ட்டிருந்ததுபற்றி ஆலயமூலத்தானத்திற்கற்றளிசார்த்தி சாமானி
யபூஜைமாத்திரம்நடத்தும்படிகோயிற்றுறையார்க்குக்கட்டளையி
ட்டுஉற்சவமூர்த்திமுதலியவற்றையெழுந்தருளப்பண்ணிக்கொண்
டு சென்னபட்டினம்வந்து அவற்றைமுத்தியாலுபேட்டைமல்லீசு
ராலயத்திலிருத்திப்பாதுகாத்துஹைதர்கலகம் நடந்தஐந்துவருட
வரையிலவ்விடத்திற்றானே வசித்து-பெத்துநாயக்கன்பேட்டைமு
தலிய பலஇடங்களிலுள்ள பலபேரிடத்தில் ஐம்பதுபொன் நூறு

பொன்இப்படிதொகையுள்ளதிரவியங்களைப் பிச்சைபண்ணிச்சே கரித்துத்தேவஸ்தானத்திற்கனுப்பியும் ஆராதனைமுதலியவற்றைந டத்தியுமிருந்தது.அந்நாளிலஹைதர் சேனையதிகரித்துப்பலவூர்களி லுங்கிராமங்களிலுஞ்சென்றுகொள்ளையிட்டுக்கொண்டுஸ்ரீபுத்தபுரி மார்க்கமாகப்போகையில்ஆலயத்தைக்கண்டுள்நுழைந்துஅவ்வா றுசெய்யயத்தனித்தலும் அச்சேனைகளுக்குக்கண்கடெரியாமலவ தியுற்றுவாயிலுமூக்கிலும்இரத்தங்கக்கிக்கொண்டுதரையில்வீழ்ந்து ருண்டுபுரண்டு படாதபாடுபட்டுப் பின்திரும்பிப்பாராமல் ஓடிப் போய்விட்டன.

இதற்குமத்தியிற்பிரணவகிரியாலய சுரோத்திரகிராமங்களாகி யஇள்ளலூர்இடையன்குப்பம் இவைக்குக்கிஸ்திராஜாங்கத்தார்க்கு க்கிரமமாகக்கட்டிக்கொண்டுவரத்தப்பிப்போய்விட்டபடியால்ரா ஜாங்கத்தாரவ்வூரிரண்டையுந்தமதுவயப்படுத்திக்கொண்டனர். அ க்கலகம்நீங்கஐந்துவருஷஞ்சென்றது. பின்புமூத்துக்குமாரசுவாமி கள்தேவாலயத்திற்கும்பாபிஷேகமுதலியவற்றை நடத்துவித்தற் பொருட்டுவேண்டுவனவாகிய திருவாபரணங்கள்வஸ்திரங்கள்உபக ரணமுதலியவும்யாசகத்தாற்சேகரித்து முன்தாம்கொணர்ந்துசே மித்துப்பாதுகாத்திருந்த உற்சவமூர்த்திமுதலியவற்றையுமெழுந் தருளப்பண்ணிக்கொண்டு சென்னைப்பட்டினத்தில் நின்று திருப் போரூர்சேர்ந்துசகலவிபவங்களுடன் கும்பாபிஷேகத்தைமுறை யாய்நடத்திஅதுமுதற்பழையபடி நித்தியநைமித்தியங்களைக்காலந்தவறாமல் நிறைவேற்றிவந்தது.

முன்னர்மலைக்கோயிலுக்குத் திருமயிலைத்தையனுபகமுதலி யாராற்கிடைத்திருந்தமேற்கூறிய இரண்டுகிராமங்களுஞ்சோர்வா யினபடியால்மேற்படிமுதலியாரதுசந்ததியாரறிந்து சுவாமிகளி டத்தில்வந்து சரணஞ்செய்து மேலிரண்டுகிராமங்களுஞ்சோர்வ டையப்பார்த்திருக்கலாமாவென்றுவிண்ணப்பஞ்செய்ய-சுவாமிக ள்நம்மாற்கூடியவரையில் முயற்சிசெய்தும் கலகமேறுதலாற்கை கூடாமற்போய்விட்டனவென்றநுதாபத்துடனிரங்கிக்கூற. அதற் குஅன்னோர்ஸ்வாமீ அவ்வாலயபூஜை யினிஎவ்வாறுநடந்துவரு மென்ன.இடையில்தடைபட்டதற்கிரங்குவதிற்பயனின்று- ஆயின் ஐந்நூறுவராகன்கிடைக்குமானால் இதுமுதலெப்போதும் தவ றுபடாமல்நடத்திவரத் தடையிராதெனவிளம்பலும் அன்னோர்ம

ளங்களிகூர்ந்துவணங்கி அத்தொகையைச்சுவாமிகள்வசம்கொடுத்துக்கட்டளைச்சாதனமும்பெற்றுக்கொண்டனர் அத்தொகையைக்கொண்டிந்நாள்வரையில்அச்சிவாலயபூஜைஆராதனைகள்நடந்துவருகின்றன.

சிலநாளாயினபின்சந்நிதானத்தின் வடபாலிற்சிறியதாயிருந்தவான்மீகீசர்கோயில்தேவியார் கோயில்களுக்குப்பெருவளூர் ஐயாமுதலியாரால்கர்ப்பகிருகமும் அந்தராளமகாமண்டபமும்பிராகாரமண்டபமும்நந்திபெலிபீடமும் விசுவநாதாலயமும்முடிப்பித்து - தேவகாரியங்களைச்செய்துவருகையில் திருப்போரூரிலுள்ளதிருவண்ணாமலைமடத்திலிருந்தவோர்சைவரதுபுத்திரனை ஆதீனத்திற்சந்தானமாக அங்கீகரிக்கும்படி ஸ்ரீ சுப்ரமணியம்தமது சொற்பனத்தில்வந்து கட்டளையிட்டுமறைந்தருளியது. அங்ஙனம் முத்துக்குமாரசுவாமிகளுடனே அப்பிள்ளையைவருவித்துலிங்கதாரணமுதலியவும்ஆசாரிய அபிஷேகமும்சந்நிதியிற்பட்டாபிஷேகமுஞ்செய்துசிவசங்கரத்தம்பிரானென்றுதீக்ஷாநாமமுந்தந்துதேவஸ்தானகயிங்கரியத்திருப்பணிகளை நாடோறும்மேன்மையாய்நடத்திவரக்கடவையெனஅருளுஞ்செய்து நிராதிசயாநந்தநிஷ்டாநுபூதியில்நீக்கமில்லாமல்நின்றனர்.

பின்புதலத்திலுள்ளோர் சிவசங்கரசுவாமிகளைச்சிவிகையிலாரோகணிக்கவிருத்திக் கிராமப்பிரதக்ஷிணஞ்செய்வித்துவணங்க-சுவாமிகள்அருள்புரிந்துபரிஜூமத்தில்வீற்றிருந்தது.

## நான்காவதுபட்டம்

# சிவசங்கரசுவாமிகளசரித்திரம்.

தேஜோமயாநந்த அகண்டாகாரநிஷ்டாநுபவராயெழுந்தருளிய சிவசங்கரசுவாமிகள்தமதாசிரியர்அநுஜ்ஞையின்படிசுவாமிகயிங்கரியங்களைமுறையுறச்செய்துவருங்கால உற்சவமூர்த்திசந்நிதியில்மகாமண்டபங்கட்டுவித்து சர்வவாத்தியமண்டபத்திற்கு அஸ்திபாரமமைத்து - மூக்குதிரைக்கால்இரண்டுஒற்றைக்குதிரைக்கால்இரண்டு-சாதாககால்நான்கு இவற்றைநிறுத்திமூன்றுபத்திகருங்கற்பணியைமாத்திரம்முடித்துஏழாநாளுற்சவத்திற்காகப் புதியஇரதமுமொன்றுசெய்வித்தது.

அதன்பிறகுதாம்சம்பாதித்த சிலபூஸ்திதிகளின்பலத்தினாலும் பூவிருந்தவல்லியூரார்கொடுத்துவந்த நெற்பிச்சையினாலும்தண்டலம்திருப்போரூரில்வரும்மேல்வாரத்தினாலும் தாம்மற்றும்செய்துவந்தசிலதகுதியுள்ளவியாபாரத்தினாலும்கோயிற்காரியங்களை நடத்திவந்ததுமன்றி ஆடிமாதகிருத்திகையுற்சவமும் ரதோற்சவமும்மூட்டைக்காரவைசியர்கள்செய்துவரும்படிக்கொடுத்து அவர்களாலஉச்சிக்காலபூசைக்கட்டளைநடந்துவரவும்ஏற்படுத்திப்பொன்மேய்ந்தமயில்வாகனமும்இயற்றுவித்தது

சான்றார்களைக்கொண்டு ஆலயத்திற்கெதிரில்பதினாறுகால் மண்டபமும்மாடவீதி அக்கினிமூலைக்குத்தெலீபால் வணிகர்களைக்கொண்டுஓர்மண்டபமும்உண்டாக்கியது.

இங்ஙனம்நடந்துவருகையில் திருவல்லிக்கேணிநவாபுசெங்கற்பட்டுத்தேசத்தைக்கம்பெனியாருக்கு ஜாகீராக்கொடுத்துவிட்டபடியால்அதனைக்கம்பெனியார்மிட்டாஏற்பாடுசெய்துஏலம்போட்டபோது பூவிருந்தவல்லியூரார்கொடுத்துவந்த நெல்வரும்படியைமேல்வாரத்திற்சேர்த்துக்கொண்டுஒருவாறு திரவியரூபமாகக்கொடுத்துவந்தனர்.

ஒருநாளிரவிற்சிவசங்கரசுவாமிகள்சொற்பனத்தில்ஸ்ரீசுப்பிரமண்யம்ஆசாரியவடிவாய்த்தோன்றி-அப்பா- தென்திசையிலிருந்துஒருவேதியப்பிள்ளைஈன்றாளுடன் வருகின்றது அப்பிள்ளையைவரவழைத்து இத்தேவஸ்தானப்பணிகளைநடத்துவதற்குஉரித்தாக்கிக்கொள்கவெனப்பணித்துமறைந்தருள அவ்வாற்றானேசுவாமிகள் ஏவலாளரைச்சதுரங்கபட்டினம்வழியிற்போய்க் காத்திருந்தன்னோரையழைத்துவருவீரெனச்செலுத்த அவரக்கணமேவழிக்கொண்டுசெல்லுகையிற்பவளக்காரன்சாவடிக்குச்சமீபமாக அவ்விருவரும்வரக்கண்டு அவர்களைஅழைத்துக்கொண்டுசுவாமிகளிடத்தில்விடுத்தனர்.அதுபோழ்திற்சுவாமிகள் அப்பிள்ளையைநோக்கி அப்பாநீதான் இச்சந்நிதானத்திற்குப்புத்திரனாகவந்தனையென்றதிசயிக்கஅக்குழந்தையோடிவந்துசுவாமிகளது ஆசனத்தின்மேலிருக்கஅற்புதமுற்றுஈன்றாளைநோக்கிஅன்னே இக்குழந்தையைஸ்ரீசுப்பிரமண்யமூர்த்தியாட்கொண்டபடியால்உமதுபுத்திரன் அல்லன்நமதுபுத்திரனுமாதலால்நீர்உமதிருக்கைக்கேகுவீரென்றுகூறிச் சிலதிரவியங்கொடுத்தனுப்பிவிட்டுப் பிள்ளைக்குச் சிவலிங்கதாரணம்செய்து.

முத்துக்குமாரத்தம்பிரானெனத்திருப்பெயரிட்டு வடமொழித்தமிழ்ஆந்திரமிவைகளைப்பயிற்றிப்பாதுகாத்துவர அப்பிள்ளைசுவாமிகளெப்பொழுதும்நீங்காமலிருந்துகொண்டு ஆண்டவர்காரியங்களை நடத்திவருகையில்துலாமதியில்ஸ்கந்தஷஷ்டிசூரசம்ஹாரஉற்சவத்தில்வண்ணாரமடத்துக்கருகேஆண்டவர்வரும்போதுசிவசங்கரசுவாமிகளுக்குமார்பில்நோய்காண-பிள்ளையைநோக்கி அப்பா ஆண்டவருடன்நீவருகவென்றுகட்டளையிட்டுவிலாவாய் உக்கிராணம்வருகையில்அதிகசோர்வடைந்ததுகண்டுஏவலாளர்அக்கணமே சுவாமிகளைச்சிவிகையிலேற்றிப் பரிஞமடத்திற்கொணர்ந்திடலும்பரிபூரணதசையைநண்ணினர்.

## ஐந்தாவதுபட்டம்

# முத்துக்குமாரசுவாமிகள்சரித்திரம்.

முத்துக்குமாரசுவாமிகள்ஸ்ரீசுப்பிரமண்யசுவாமிதிருவருளாற்கயிங்கரியங்களைத்தம்பூர்வாசாரியர்கள் நடத்தியவைக்கிணங்க நடத்திவருகையிலசென்னைப்பட்டிணம் வைசியகுலோத்துங்கநமசிவாயசெட்டியாரைக்கொண்டுவாகனமண்டபமும் காழுசெட்டியாராலஆதியிற்சிறியதாயிருந்தவேம்படிவிநாயகர் கோயிலைவிருத்திசெய்துகர்ப்பகிருகம்அந்தராளம்மண்டபம்திருமதிலமுதலியவும்கட்டுவித்தது,இதனபின்புசுவாமிகளுக்குதேகத்தில்வசூரிகண்டுஅதனால்நோயதிகரிக்கஸ்ரீமுருகக்கடவுள்தமதுகனவில்தோன்றிசெம்பாக்கமென்னுமூரில்ஓர்பெரியவர்கூன்முதுகினர் வீரசைவமரபினர்உப்பிலாப்புசிப்பினர்இவ்வகையினராயிருக்கின்றவரை ஆதீனத்திற்குரியராக்கிக்கொள்கவென்றுகுருமூர்த்தமாகித் திருவாய்மலர்ந்தருளலும்சுவாமிகள்அப்போழ்தேகோவிற்றுறையாளாயனுப்பி அவரையழைக்க அம்முதியோர்தாம் வயோதிகராதலால்தம்மாலாகாதென்றுதடுத்ததைக்கேள்வியுற்றுமுத்துக்குமார சுவாமிகள்மனவருத்தத்துடன்ஆண்டவரைத்தியானித்துக்கொண்டிருந்துஒடுக்கமுற்றனர்.அற்றையிரவில் ஸ்ரீசுப்பிரமண்யம் அம்முதியோராகிய செம்பாக்கப்பரதேசியின்கனவில்தோன்றிஅவர்முதுகிலமைந்தது மடசந்நிதிகயிங்கரியங்களைநடத்துப்பொருட்டுன்னையாட்கொள்ள அவ்வாறமைந்திருக்கவும்நீயதனைமறுத்தனையன்றோவென் றுரைத்

துமறைந்தருளலும். அந்நிலையே அம்முநியோருக்குக் கண்மறைந்
திடவுணர்ந்து துண்ணெனமனத்திலச்சமும்ஆநந்தமுமுற்றுச் சில
திரவியத்துடன்வழிக்கொண்டுதிருப்போரூர்வந்தனர், அவரைத்தல
த்தினர்அழைத்துக்கொண்டுவந்துசந்நிதியிற்பட்டாபிடேகமுதலி
யவுஞ்செய்துசிதம்பரத்தம்பிரானென்றுதிருப்பெயர்புனைந்துசிவி
கையிலாரோகணிக்கஇருத்திப்பிரதக்ஷிணஞ்செய்வித்துத்தோத்திரி
க்கப்பரிஞமத்திலெய்திவீற்றிருந்தனராக.

## ஆறுவதுபட்டம்

# சிதம்பரத்தம்பிரானவர்கள்சரித்திரம்.

சச்சிதாநந்தசொரூபாநுபவராய் சாக்ஷாத்காரசிவ சுப்ரமண்
யமூர்த்திகிருபையாற்பிறவிக்கூறாகிய உடற்குற்றம்ஒழிந்தசிதம்ப
ரத்தம்பிரானவர்கள்தேவார்ச்சனைப்பிரவர்த்தகராய்த் திருப்பணிக
ளைவேதாகமமுறைப்படிநிறைவேற்றிவந்தனர்.மேற்சென்றசித்தி
ரபாநுவருடமுதலாகமூன்றாண்டுவரை சம்பவித்த பஞ்சகாலத்தி
லும்சுவாமிகயிங்கரியங்கட்குச்சிறிதும்தவறுவராமலும்தலத்தினரு
க்குஅன்னபாநாதிகளிற்குறைவுநேரிடாமலும்பாதுகாத்துவருகை
யிற்பித்தவேடுஎன்னும்பதியிலிருந்துசைவமரபினராகியவோர்ப
தேசிவந்துதம்பிரானவர்களையடுத்திருக்கச்சிலநாளில் ஸ்ரீசுப்பிரம
ண்யுந்தம்பிரான்கனவில்தோன்றியுணர்த்தருளியவாறுபித்தவேட்டு
ப்பரதேசிக்குலிங்கதாரணமுதலியதீக்ஷையும்ஆசிரிய அபிஷேகமு
ம்பட்டாபிஷேகமும்புரிந்துசிவசங்கரத்தம்பிரானென்னுந் திருப்
பெயரால் ஆதீனத்திற்குரியவராக்கிச்சின்னாளில் ஒடுக்கதசையையு
டைந்துநின்றனர்.

## ஏழாவதுபட்டம்

# சிவசங்கரத்தம்பிரானவர்கள்சரித்திரம்.

சிவசங்கரத்தம்பிரானவர்கள்சிதம்பரசுவாமிகள்உரிமைமேற்
கொண்டு தமதுமுன்னோரதுதொன்மைப்படியிற்சிறிதும்பிறழ்வி
ன்றி யாலயத்தில்நித்தியநைமித்தியங்களை நடத்திவந்துசர்வாத்தி
யு மண்டபத்தைப்பூர்த்திசெய்யஎண்ணங்கொண்டுமுயன்று அதற்

குமாரவலிபுரத்திலிருந்துமுக்குறுணிக்கால் ஒன்றுஞ்சாதாக்கால்ஒன்றுங்கொண்டுவந்துசேர்த்துவைத்துத்திருப்பணிதொடங்கயத்தனித்த காலத்தில்தேகவசதியநுகூலப்படாமல்ஸ்ரீ சுப்பிரமண்யமூர்த்திதிருவடிநிழலில்ஐக்கமாகிநின்றனர்.

## எட்டாவதுபட்டம்

# முருகேசத்தம்பிரான்

## அவர்களசரித்திரம்.

சர்வலோககாரணசாக்ஷாத்கார ஸ்ரீசுப்பிரமண்யஉபாசனாவிரதராய்வல்லக்கோட்டையென்னுந்தலத்திலிருந்தா ஒருவர்பதினாறுவயது தொடங்கியன்னமில்லாமற்பால்பழம்புசிப்பவராய்அத்தலத்திற்சுப்பிரமண்யசுவாமி கோயிற்றிருப்பணிசெய்துகொண்டிருக்குநாளில் ஓரிரவிற்கனவில்கண் முருகக்கடவுள் எழுந்தருளிநமது திருப்போரூர்ச்சந்நிதிக்கு வருகவெனக்கட்டளைபணித்து அத்தருணமே தேவஸ்தானவதிகாரிகட்குஞ் சொற்பனமாகி அதுசெய்தியையுணர்த்திட அவ்விரதியானவர் அப்போழ்தேதிருப்போரூர்வந்து சேர்ந்தனர். அவ்வாத்தலத்துள்ளோர்தேவஸ்தான வதிகாரிகளைக் கொண்டு பரிஞமத்திலழைத்துப்போய் ஆராத்தியவேதியர்களாற் சிவலிங்கதாரணமுதலியவைசெய்வித்துமுருகேசத்தம்பிரானெனப்பெயர்தரித்துச்சிவிகையின்மேற்பிரதக்ஷிணம்புரிவித்துமடாலயத்தில்விடுக்கஇருந்துதேவகாரியங்களைக்கிரமமுறநடத்திக்கொண்டு ஆலயப்புறத்திருமதிலும்மதிற்முட்பிராகாரவாயுமேலைவாயில்தவரிசையும் திருமடைப்பள்ளியைப்பழுதறத்தளமும் உக்கிராணமுமியற்றுவித்தனர்.

இரண்டாம் பட்டத்தாராகியசிவசங்கரசுவாமிகட்குஆறுகாட்டுநவாபு கொடுத்திருந்ததிருப்போரூர்தண்டலம்இவற்றின்சுரோத்திரியதானசாதனமாகியபர்வானாவைஅக்காலத்திலஹெட்அஸிஸ்டெண்ட் கலெக்டர்மக்ளீன்துரையென்பவர்முருகேசத்தம்பிரானிடத்திலிருந்துவருவித்துக்கொண்டனராதலால்அது - நாளதுவரையில்அவ்வதிகாரிகளிடத்திலேயேயிருக்கின்றது.

அதன்பின் திருமயிலையிலிருந்த வீரசைவவிசிஷ்டராகியநந்தைசுபுரீ சகோதரர் லிங்கையென்பவரதுபுத்திரரும்மகாதேவை

யர் தௌகித்திருமானவீரபத்திரையர்இல்வாழ்க்கையில்விரக்தரா
ய்த் துறவுமேற்கொண்டு திருப்போரூரிலுள்ள வள்ளையாரோடை
யென்னும் சரவணதீர்த்தத்திற்குநீராழிமண்டபங்கட்டுவிக்கவுத்தே
சித்து அஸ்திபாரம்பதித்து நடத்திவருகையில்நந்தனவருடத்தில்
நேரிட்ட பஞ்சத்தால் திருப்பணிநடையாயிற்றுஅதனால்வீரபத்தி
ரையருக்குத் தேகம்அசவுக்கியமாகிமிகுந்தவுபத்திரவத்தால் வருந்
தும்போதொருநாளிரவில்முருகக்கடவுள் மயில்வாகனரூடராயெ
ழுந்தருளி வீரபத்திரஐயர்சயனித்திருந்த வீட்டினுட்சென்றதாக
அவர்பக்கத்திற் றுயில்கொண்டிருந்தஓர்வயோதிகபரதேசியம்மை
யும் அவர்மனைவிமீனாக்ஷியம்மையும் சொற்பனங்கண்டுவிழித்து அ
வருக்குவியாதிநீங்கிற்று இனிபிராணபயமில்லை ஸ்ரீசுப்பிரமணிய
மே இங்கெழுந்தருளிநிவிர்த்திசெய்ததென்று சொல்லப்போதுவி
டிந்தபின்பும்அதுநீங்காமல்வருந் துகையில்இந்நாளில்திருமயிலையி
ல்வடபால் தெய்வீகத்தன்மையடைந்துவிளங்கியிருக்கின்ற அப்ப
ரென்னும் ஒருபெரியவர்அந்நாளில்வீரபத்திரையர்கிருகத்திற்குவ
ந்து அவரைநோக்கிநீவிர்திருப்போரூர்நீராழிமண்டபப்பணியை
யாதுபற்றிநடத்தாதிருந்தீரென்ன அத்ததியில் ஐயருக்குப்பேசுதற்
குச்சக்தியில்லாதிருந்தபடியால் அத்திருப்பணியைநடாத்தவேறு
வருப்படியின்மையாலும்க்ஷாமகாலமாகலாலும் தடையாயிற்றெ
ன்றுதலையிலெழுதிக்காட்ட-பெரியவர் இவ்வியாதியொழிந்துசவுக்
கியமானால் இனிமேலாயினும் அதனைநிறைவேற்றப்போது வீரா
வென்றுகூற அவ்வாறுபுரிதற்குத்தடையில்லை ஆனால்இல்லாளிருப்ப
தால் தடையற நடத்தக்கூடுவதில்லையேயென்றெழுதித்தெரிவிக்கப்
பெரியவர்தேகப்பிரிந்தால்இல்லாளையாவர்காப்பாரென்ன-ஐயர்சு
வாமிகாப்பரென்றெழுத அதற்குஅப்பர்அக்கடவுளெப்போதுங்கா
த்தருள்வரென்றுரைக்க ஐயர் அவ்வாறாயின் இதுபோழ்தே இல்லா
ளுக்கும் அடியேனுக்கும்பந்தநிவிர்த்தியாகுமானால் அத்திருப்ப
ணியையேற்றுக்கொள்ளலாமென்றெழுதிக்காட்டப்பெரியவர்ஐய
ரது மனைவியைநோக்கித் தாயேஉமக்குமாங்கல்யபிக்ஷைவேண்டு
மாவேண்டுவதில்லையாவெனக்கேட்க அந்தஅம்மைஅவர்பாதத்தில்
வீழ்ந்து-சுவாமீஅடியாளுக்கு மாங்கல்யபிக்ஷையேவேண்டும்மற்
றையாதொருசம்பந்தமும் வேண்டுவதின்றுஆயின் அடியாளுக்கிர
ண்டுவரங்கொடுத்தல்வேண்டும் அவற்றுளொன்று-பிக்ஷைமாத்திரம்

அடியான்கொடுக்க அவரோற்றுக்கொள்ளல்வேண்டுமென்பதும் மற்றையது அடியான்-முன்னர்ஐக்கியமுற்றால் அவரோ அடக்கம்செய்யவும் அவர் அவ்வாறு ஐக்கியமுற்றால் அடியாள் அடக்கம்செய்யவும்வேண்டுமென்பதுமேயாம் என்றதிகவாரமையுடன்சொல்லிக்கொள்ளப்பெரியவர்ஐயரைநோக்கிஇவற்றிற் குத்தரம்யாதென்னஐயர்இவ்வாறே மனைவிநம்மை நமது திருவடியில்வைத்து நமஸ்கரித்து ஒப்புவித்தால் ஒப்புக்கொள்ளுகின்றேன் என்றெழுதமனைவியும் அவ்வண்ணமே பரிவுடன்புரிந்து, சரணஞ்செய்துநிற்கப்பெரியவர்ஐயருக்குத்தமது திருக்கரத்தால் வெண்ணீறுதரித்துநீவிரெழுந்துஸ்நானஞ்செய்து சிவபூசையைமுடித்துப்புசிப்புக்கொண்மினென்ன அக்கணமே அந்நோய்நீங்கி ஐயர்நியமங்களைமுடித்துக்கொண்டு பெரியவர்க்கமுதளித்துத்தாமும் அருந்தினர் பெரியவர்இதுமுதல் திருப்பணியைநடத்துமென்று கூறலும் ஐயர்நாளொன்றிற்குஒரு ரூபாய் கிடைத்தாலன்றிப்புசிப்புக்கொள்ளத்தக்கதில்லையென்றுரைத்துஅவ்வாற்றனே நாடோறுங்கிடைக்க-கருங்கற்பணி மண்டபந்நிறைவேற்றிவர முருகேசத்தம்பிரானவர்கள் அம்மண்டபத்திற்ஸ்வாமியையெழுந்தருளப்பண்ணித்தெப்பவுற்சவந்தரிசித்தல் வேண்டுமென்றொரு நாள்சொல்லவிரைந்து அம்மண்டபப்பணியைநிறைவேற்றிஅத்திருவிழாவும் நடத்தத்தெரிசித்துத்திருமயிலையில்ஐயர்மீண்டுவந்திருந்தனர்.

அங்ஙனமிருக்குங் காலத்தில்முருகேசத்தம்பிரானவர்கள்தமக்குச்சரீரமெலிவுற்றதுநோக்கித்தாழம்பூர்ப்பாளயப்பட்டுபோத்து ரெட்டியார்வேங்கடகிருஷ்ணப்பநாயக்கரென்பவர்கட்குத்தமது தேகமெலிவைத்தெரிவித்துநமதாதீனத்திற்குரித்தாய் ஆண்டவர்நித்தியநைமித்தியங்களைச்சிறப்புறநடத்திவரத்தக்க வோர்பிள்ளையைத் தாங்களேயோசித்துவருவித்துத்தரல்வேண்டுமென்ன அப்பொழுதே அவ்விருவருள்வேங்கடகிருஷ்ணப்பநாயக்கர்பிரயாணமேற்கொண்டு சென்னைப்பட்டினத்தையடுத்தசிந்தாத்திரிப்பேட்டைசேர்ந்து அங்குமுத்துவீரப்பமுதலியார் இருக்கத்தில்வந்திருந்து திருப்போரூர்நீராழிமண்டபத்திருப்பணியைநடத்துகின்றவரியார் அவரெங்கிருக்கின்றனரென்னமுதலியார் அன்னோரையானறிந்திலேன் அவர்வசிப்பது திருமயிலையென்று நாயக்கரது வேண்டுகோளால் அன்றிரவிற்பத்துநாழிகைக்குத்தப்பாலிருந்தஐர்பெரிய

வரிடத்தில்-ஐயா இங்கேஒருபிரபுவந்திருக்கின்றார் நாளையுதயத்தில் அவரூர்க்குப்பிரயாணமாகின்றார் ஆதலால் இப்போதே யிங்குவந்தால் திருப்பணிக்குயாதேனும் தக்கபிரயோசனங்கிடைக்கலாமென்று வீரபத்திரையருடன்சொல்லுமென்று சொல்லிவிடுத்து ஐயரை அவ்விரவில்வருவிக்க-நாயக்கர் ஐயரைநோக்கியஞ்சலித்துத்தாம்திருப்போரூர்த்தேவஸ்தான ஆதீனத்திற்குவரல் வேண்டுமென்ன ஐயா அஃது நம்மாலாவதில்லையெனவும் நாம்முயன்றிருக்கின்றதிருப்பணிநிறைவுபெறின் அஃதேயமையுமெனவுஞ்சொல்லி மீண்டுதமதிருக்கையில் தண்ணிஅமுதுகொண்டுதெருத்திண்ணைமேற்றனியாயுட்கார்ந்திருந்து அவ்விரவில் தம்மைச்சிந்தாத்திரிப்பேட்டைக்குவருவித்துவினவியவிடயத்தைநினைத்தாகுலமுற்று ஆண்டவனையெண்ணிச்சிந்தித்துக்கொண்டிருக்கையிற்சாக்கிரசொற்பனம்போலப்பிராணபீதியான ஒரு * கனவுகண்டுவிழித்துக்கொள்ள ஐயருக்கு ஆராமையுங்கண்ணீரும் உண்டாகியுடலங்கம்பிதமுற்றுவருந்த அந்நிலையில்மார்புநோயுண்டாயிற்று அந்நோயால் உட்கார்ந்திருக்கவும் சயனித்துக்கொள்ளவும்நிற்கநடக்கவசனிக்கவுங்கூடாமல் கொடியதொந்தரையுண்டாகி முருகக்கடவுளைத்தியானித்து ஐயனேஈதென்ன ஆச்சரியம் தேவர்சந்நிதானம்வா அடியேன்தெரியாமையாற்றடைசொல்லினேனென்றோ விந்நோயையேவிச்சோதிக்கின்றனீர் அஃதேதிருவுளப்பாங்காயி னிக்கணமேவருகின்றேன் இத்துன்பத்தைநிவிர்த்திசெய்தருளல் வேண்டுமெனப்பிரார்த்தித்துத்திருநீறெடுத்தணிந்துகொள்ளலும் சுடரோன்முன் பனித்திவலைபோலவ்வியாதியிருந்திடந்தெரியாதுநீங்கிற்று.

வேங்கடகிருஷ்ணப்பநாயக்கர் முருகேசத்தம்பிரானவர்களிடத்தில்வந்து நீராழிமண்டபத்திருப்பணி நடத்திவருகின்றவரையாதீனத்திற்குவருகவென்றழைத்தால் வரவிசையாதென மறுக்கின்றனராகையால்தேவரீர்தயைசெய்து அவருக்கோர்திருமுகமுய்த்தல் வேண்டுமென்றுசொல்லி விடைகொள்ளத்தம்பிரானவர்கள் அவ்வண்ணம்ஐயருக்கோர்திருமுகமும் தாழம்பூர்க்குமீண்ட நாயக்கருக்

* கனவின்வரலாற்றை யிங்குச்சொல்லப்புகின் பெருகும் அதனை இப்போது பாடலாகிவருகின்ற சிதம்பரசுவாமிகள் ஆதீனத்தார்புராணத்திற் கண்டுகொள்க.

கோர்திருமுகமும்அனுப்புவித்தனர்அவற்றை இருவரும்வாங்கிவா சித்துவிடயங்கள்தெரிந்தாராயினர்.

இங்குமுத்துவீரப்பமுதலியார், மளிகை அருணாசலமுதலியாருடன்முற்கூறிய அப்பரென்னும் பெரியவரிடத்திற்சென்று இதுவரை நடந்ததுகளைத்தெரிவித்துத்திருப்போரூர் ஆதீனம் தர்மகர்த்தத்வத்தை அங்கீகரிக்கும்படிவீரபத்திர ஐயரவர்கட்குக்கட்டளை செய்தல்வேண்டுமென்றுகேட்டுக்கொள்ள அத்தருணத்தில்ஐயரும் அங்குவந்தனர் அப்பர், ஐயரைநோக்கிநீவிர்திருப்போரூர்த்தேவஸ்தான ஆதீனத்திற்குடன்பட்டலாமேயெனச், சுவாமிஅடியேன்சல்லியமின்றியிருக்கநினைத்தாற் பெருங்கவலையின் வயப்படுத்துவிக்கலாமோவென்னைப், பெரியவர் அவரைத்தனியேயழைத்துப்போய்நமக்கு-ஜன்மாந்தரபுண்ணியபலாநுபவமனுகியதால்அதனைத்தப்பநரிது ஆதலால்நீவிர் அதற்குச்சம்மதிக்கவேண்டு மென்றும்உடன்படாவிடின்அதுபற்றியின்னும் நமக்குப் பிறவிக்கிடமாகுமென்றுமுரைத்து "வாழ்வுவந்ததென்றுமகிழாதே, தாழ்வுவந்ததென்றுதளராதே" என்பதனையும்சொல்லிவிடைதர, வேங்கடகிருஷ்ணப்பநாயக்கரும்தமக்குவந்ததிருமுகத்தைக்காட்டியழைக்கஅக்கணமேஐயர் உளர்தியின்மீது நாயக்கருடன் போரியிங்கணெய்திப் பரிணமத்தைதல்வணி முருகேசத்தம்பிரானவர்களைக்கண்டுகொள்ளத் தம்பிரானவர்கள் ஐயரைநோக்கித் தமக்கு ஒடுக்கதசைநேரிட்டிருப்பதால்தேவாலயத்தையும்இவ்வாதீனத்தையும் பரிபாலனஞ்செய்யநீவிர் உரியராதல்வேண்டுமென்றுரைக்கஐயரதற்கிசைந்தாராக. அதுபோதில் ஆசாரியவபிடேகமும்சந்நியாசப்பட்டாபிடேகமும் * புரிவித்து முத்துக்குமாரத்தம்பிரானெனத் திருப்பெயரிட்டுச் சிவிகைமேல் கிராமப்பிரதக்ஷிணஞ்செய்வித்துமுறைப்படிதிருமடத்திற்கொணர்விருந்தனர். பின்னர்முருகேசத்தம்பிரானவர்கள்சின்னாளில்ஸ்ரீஷண்முகமூர்த்திதிருவடியிலைக்கியமாயினர்.

## ஒன்பதாவதுபட்டம்

# முத்துக்குமாரசுவாமிகள்சரித்திரம்.

அகண்டபரிபூரணநிரதிசயாநந்தபரமஞானசொரூபசித்தராய்முத்துக்குமாரத்தம்பிரானவர்கள் தம்முன்னவர்க்குச்செய்யவே

* சாதாரண௵ வைகாசி௴.

ஸ்வேவணகிரியாதிகளைச்செய்துமுடித்தனர்.பின்புஆலயத்திற்சென்றுசுவாமியைத்தரிசித்துத்தாமும்ஸஹதருமகர்த்தராகியகடம்பூர்சரோத்திரதார்சபாபதிமுதலியாரும் ஸ்தானிகர்களும்சேர்ந்துகோயிற்சொத்துக்களில்அககாலத்திலிருந்ததுகளைப்பார்வையிட்டு-கைங்கரியங்களையும்மடாலயதருமத்தையும்நடத்திக்கொணடுவருகையில.

ஆலயத்தில்நாயகர்சந்நிதி,வள்ளிநாச்சியார்சந்நிதிகளின்மேல்ஸ்தூபிகளிற்செடிகள் முளைத்திருந்ததுகளையெலலாம் வேர்களைத்துதிருத்தித்தளஞ்செய்து அவற்றின்மேடைமண்டபம் கருங்கற்பணிமாத்திரமாயிருந்ததைத் தளம்பமுச்சுச்சர்வவாத்தியமண்டபசபைமுதலானதைமேல்ஒன்றாகஜவுயரம்சுண்ணத்தால் செங்கற்பொடிநிரைத்துத் தளவரிசைபுரிவித்துப்பிறகுதிருமயிலைமன்னன்சபாபதிமுதலியாரென்பவரைக்தாம்-முன்நடத்திவந்ததீராமிபண்டபப்பணியைநிறைவேற்றும்படி ஏற்படுத்த-அவரால் அத்திருப்பணிகுறைவறநடந்தது.

பின்புதம்பிரானவர்கள்நாளொன்றுக்குப்பத்துரூபாகட்டளைநியமித்துக்கொண்டுசர்வவாத்தியமண்டபமேடையிற் சிலதூரங்கருங்கற்பணிநடத்து மற்றது சும்மாவிருந்ததற்கு உத்திரம்,போதிகை, பாவுக்கல் முதலியவைமுடிப்பித்துஅ ஈற்றும்மேற்றளவரிசையுஞ் செய்துசுண்ணந்தீற்றுவித்துமாவலிபுரத்திலிருந்துமூக்குதிரைக்கால்ஒன்றும்ஒற்றைக்குதிரைக்கால் ஒன்றுமாகியவிரண்டணையும்அதிகபிரயாசையுடன்வருவித்தாலயத்திற்சேர்த்திருக்கின்றனர்.

அன்றியுந்தம்பிரானவர்களதுமுயற்சியினாலும்யாசகபிரயோசனத்தினாலும்முற்கூறிய மன்னன்சபாபதிமுதலியாரதுஉபக்கிருதியாலும்சர்வவாத்தியமண்டப அசுவஸ்தம்பங்களின் திருப்பணிகள்கிரமக்கிரமமாகநடந்தேறிவருகின்றன.

சந்நிதானத்தில் அந்தராளம்,மகாமண்டபம்,திரணைமாளிகை,அநந்தபத்தி,சக்கரஸ்வாமி,ஆறுமுகமூர்த்தி,தெய்வயானைநாச்சியார்சந்நதிகளும்,திரணைமாளிகை, மகாமண்டபம், இருபத்துநாற்கால்மண்டபம், வான்மீகிசர் கோயில்முதலியவைக்கும் தளவரிசைஸ்தூபிமுதலிய மேற்றிருப்பணிகள்யாவும் திருத்திச்சாத்துப்படிமண்டபத்திற்குக்கருங்கற்பணியாவும்நடத்தி,வெளிப்பிரகாரம்அநந்தபத்தியிற்சிலபாகத்தைத்தடுத்துத்தளஞ்செய்துமடைப்பள்ளிமுற்றுத்தளம்பண்ணி யுக்கிராணத்தை

செய்துபிரணவவசலாலயகெற்பகிருகம்ஸ்தூபிஅந்தராளம்மகாமண்டபம்தேவியார்பாலாம்பிகை சந்நிதானமுதலிய மூன்றிலுமாகியிருந்தனவைகளையெல்லாம்சீர்செய்து ஸ்தூபிதளவரிசைமுதலியபுதியனவாகவியற்றிஅவ்வாலயத்தின்வெளிப்பிரதக்ஷிணமார்க்கம்நெருக்கமாக விருந்ததைக் குண்டுககற்களால்ஓரங்கள்சரிந்திடாமற்கட்டிவிசாலமாக்கிப்பிரதோஷ வுற்சவமுதலியபஞ்சபர்வகைங்கரியங்களை நடத்திவருகின்றனர் ஸ்ரீசுப்பிரமணியசுவாமிபிரமோற்சவத்தில் உபதேசவுற்சவமும்சஷ்டிவிசாகத் திருவிழாக்களும்விசேடமாக நடப்பிக்கின்றனர்.

தற்காலத்தில் வாகனமண்டபப்பணி நடந்துவருகின்றது.

மடாலயத்தருகின்வேலாயுததீர்த்தக்கரையிற் சுந்தரவிநாயகர் கோயில் தட்டோட்டுக்கட்டிடத்தி லிருந்ததனைத்திருத்திக்கருங்கற் செங்கற்களாற்கெற்பகிருகம்மகாமண்டபம்நிருமித்துப்பிரகாரத்திலுள்ளவொடுக்கச்சந்நிதானத்திற்சுற்றுத்திருமதிலும், கீழ்த்திசையில் வாய்தற்படியும்அலங்காரமண்டபமும்,சிதம்பரசுவாமிகள்சந்நிதி நாற்கான்மண்டபத்திற்குச்சுற்றிலும்பதினாறுகான்மண்டபமாகஒருசபையும்மேல்தளமும்,சிகரமும்,கீழ்த்தளவரிசையும்,நாலாவதுபட்டத்துத்தம்பிரான்சமாதியில நாற்கால்மண்டபமும் கட்டுவித்தனர்.

இக்கலியாண்டு நாலாயிரத்துத்தொளாயிரத்தறுபத்துமூன்றில்நிகழும்சாலிவாகனசகாப்தம்ஆயிரத்தெழுநூற்றெண்பத்துநான்கினியன்றசித்தாத்ரிவருடத்தில் முருகக்கடவுளது திருவருளால் ஓர்தினத்திற்குமுப்பத்தைந்துரூபாகிடைத்தாலன்றிப்புசிப்புக்கொள்வதிலையென்றுவிரதமேற்கொண்டு எளிதிற்செய்துமுடித்தற்கேலாத கும்பாபிஷேகத்தை வேதாகம விதிப்படி ஆண்டவர்க்குச்செய்ய வேண்டித்தமது சங்கற்பத்தின் படிநேராது அநேகமுறைபட்டினி நேரஅப்போதெல்லாம் இராயப்பேட்டைசுப்பராயமுதலியார்குமாரர் தெய்வசிகாமணிமுதலியார் தம்பிரான்சுவாமிகளது விரதத்தைக்கேள்வியுற்று அவ்வாறுபட்டினிநேருங்காலங்களில்அதுதீரும்படியாக வுபயோகமாகக்கடவதென்று சங்கற்பஞ்செய்தெடுத்து வைத்தரூபாஆயிரத்தையும் அன்றன்றைக்குமுப்பத்தைந்துவீதம்கொடுத்தனுப்ப விரதந்தவறாமற்பட்டினிதீர்ந்தும்சென்னைமுதலியநகரத்திலும்குன்றத்தூர் தையூர்கடம்பூர் செய்யூர்களும்பே

செங்கற்பட்டுமுதலியபற்பலநத்தங்களிலும்சஞ்சரித்தும் அவ்விர
தப்படி சேகரித்தஅநந்தநிதியைக்கொண்டு கும்பாபிஷேகத்தைத்,
துன்மதியாண்டுஉத்தராயணம் மிதுனரவி பூர்வபக்ஷம்எவ-புதவார
ம்சுவாதிநாளில் யாவரும்வந்து தெரிசித்தாநந்தமுறும்படிஅநந்த
விபவங்களுடன்விசேஷவைத்திய நாதகுருக்கள்முதலிய ஆதிசைவ
ராதியநேக பிராமணோத்தமபுநிதர்களால் முறைவழுவாது நடத்தி
நாடோறும்சமாராதனைமகேசுரபூஜைதக்ஷிணையிவற்றிற் குறைவின்
றிச் சூளும்பேடுஆறுமுகமுதலியார். வேதாசலமுதலியார், கொன்
றை-அருணாசலமுதலியார் கவர்னர்பட்ளர்-ஐயாமுதலியார்குமார
ர் கந்தசாமிமுதலியார். திருவல்லிக்கேணி-ஜவுளிக்கடை-முத்தைய
முதலியார். செங்கற்பட்டுஜில்லாகோர்ட்டு-வகீல்-சுப்பராயபிள்ளை
முதலியஅன்பினர்பலரும் அபிமானிக்க மண்டலாபிஷேகத்தைநி
றைவேற்றினர்.

அந்நாளில்முன்னம்வடமொழியிலிருந்த திருப்போரூர்மகா
த்மியத்தைஇப்போது ஆலயத்தில்மந்திரபுட்பகயிங்கரிய அலுவலி
லிருக்கும் வேதசாஸ்திரபண்டிதஸொப்தீகபூஷணரான கிருஷ்ணசா
ஸ்திரியார் முன்னிலையில்உயர்துளுவவேளாண்மரபினராய்வீரசை
வாகமசிவார்ச்சனாவிரதரா யில்லறத்தைவழுவறநடத்திப்பின்மனத்
துறவுநேர்ந்தவராய்ஸ்ரீயுத்தபுரிக்குவந்து முத்துக்குமாரத்தம்பிரா
ன்சுவாமிகளுடனீங்காமலிருக்கின்றவராய் அங்குதரிசனார்த்தம்வரு
பவர்கட்கு (நமதுசிதம்பரசுவாமிகளது அநுஞையின்படிநடந்தசி
வசங்கரதேவர்போலத்)திருநீறளித்து-பரிஞூமத்திலுள்ளசமாதித்தி
ருப்பணிமுதலியவற்றை நடத்துவதற்கநுகுணபூஷணராய்வசித்தி
ருக்கும் விநாயகபரதேசியாரைக்கொண்டுமொழிபெயர்த்தெழுதி
ப்புரசை-அஷ்டாவதாநம்.சபாபதிமுதலியரால்விருத்தச்செய்யு
ளாகப்புராணமியற்றிக்-கற்றுவல்லபெரியோர்மதிக்கத்தக்கதமிழ்ப்
புலமையும் சதுர்வேதசித்தாந்தஞான நூல் சாஸ்திரத்தேர்ச்சியுட
னே நிறையும்பொறையுமிக்கவரும்,பிரமோத்தரகாண்டம்,ஸ்காந்த
ச்சுருக்கம்,ஸ்ரீகழுக்குன்றப்புராணம்திருவிரிஞ்சைப்புராணம்,இரா
மாயணமுதற்பாகம்,நமதுதவப்பேறாகியசிதம்பரசுவாமிகள்பாடி
யருளிய பஞ்சாதிகாரவிளக்கம்இவைமுதலிய பலநூல்களுக்குரை
யாசிரியரும்,திருப்போரூர்ச்சந்நிதிமுறையை நன்குஆராய்ச்சிசெ
ய்துஆதியில்அச்சுப்பதித்தவரு [illegible] (செ[illegible]யில் [illegible]னிருந்தகா

வேஷ்னென்றும்கல்விச்சங்கத்தில்தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திப் பின்னர்பிரின்ஸிபல் சதாசிவன்என்னும் தருமநீதித்தலைசிறந்தவில்லியனூர்த் தாண்டவராயமுதலியாரிடத்தி லியற்றமிழ்பயின்ற) மேற்கூறிய அஷ்டாவதானம் சபாபதிமுதலியாருக்கு ஆசிரியருமாகியவித்வான் காஞ்சிபுரம்சபாபதி முதலியாரைக்கொண்டுபலர்முன் அப்புராணத்தை அரங்கேற்றிவரிசைகள்நல்கி அப்புராணவியற்றினவராதுபிரதம உபாத்தியாயரும், புதுவையிற்முன்னம்பிரசித்தமாயிருந்த வீரசைவப்புரீதர்பிள்ளையவுபாத்தியாயர்மாணுக்கருமாகிய அச்சுதபிள்ளையிடத்தில் ஸ்ரீசுப்பிரமண்யமூர்த்தியுபாசனையாற் சற்றுப்பயின்றுள்ள அஷ்டாவதானத்தைமண்டலாபிஷேகநிறைவுநாளினத்தில்ஆண்டவர்சந்நிதியிலநேகர்காணச்செய்வித்து அதற்கு முன்னுமின்னும் ஷை அ-சபாபதிமுதலியார்பாடியுள்ள திருப்போரூர்நான்மணிமாலை, சிலேடைவெண்பா, கலம்பகம், அலங்காரபஞ்சகம், யமகஅந்தாதி, சதகம், பிரணவாசலசதகம், வண்ணங்கள், கீர்த்தனங்கள் இவற்றுட்சிலவற்றையச்சுப்பதித்தரங்கேற்றலும் செய்வித்தனர்.

பின்பு, குரோதனவாண்டில்தம்பிரானவர்களநுமதியில்ஸௌஹார்த்தர் கடம்பூர்வேதகிரிமுதலியாரும் சகோதரர்அப்பாசாமிமுதலியாரும்திருப்போரூர்ப்புராணத்தைக்கீர்த்தனமாகப்பாடித்தருகவெனப்-பு-அ-சபாபதிமுதலியார் அவ்வாறுபாடிவருகையிற் புராணத்தில்வள்ளிதெய்வயானைநாச்சியார்திருமணவரலாறுசொல்லப்படாமையால் அஃதுமிருந்தால்நன்றாதலால்-ஸ்காந்தச்சுருக்கத்தையுங்கீர்த்தனையாகப்பாடிச்சேர்க்கவென்று தம்பிரானவர்களும் சிலபெரியோரும்கூற அதனையும்பாடியதில்வேணபடிதக்கமுயற்சிசெய்தனர் அவற்றையினியரங்கேற்றுவிக்கமுயன்றபடிதம்பிரான்சுவாமிகளது அநுமதியாலவையிப்போதுகற்பிக்கப்பட்டுவருகின்றன.

தம்பிரானவர்கள்தொட்டிக்கலை, சிதம்பரமுதலியார்குமாரர்சபாபதிமுதலியாரென்பவரைமகாநவமியுபயகாரராக்கநியமித்து அவ்வுற்சவத்தை வருடந்தோறும்மிகுந்தசிறப்பாக நடத்திவருவதுமல்லாமல் அவரைக்கொண்டுசந்நிதிக்கெதிரில் துவஜஸ்தம்பத்தைச்சூழவட்டவடிவாய்அநேகவிசித்திரநேத்திரோற்சவமாகத்தேக்குமரக்கால்கள் தாங்கும்மேற்பாட்பாகத்துத்திராகத்தகட்டுப்பாய்மேய்ந்த

வோர்சக்கரப்பந்தல் நிலையுறவமைத்துஇரசிதத்தகடுமேய்ந்தஅச்சவஹூர்த்தியொன்று அவராற்செய்வித்துநவராத்திரியில் அவ்வாகனத்தின்மேற்பரிவேட்டைத்திருவிழாவுந்நிறைவேற்றிவருகின்றதுமன்றி வடவண்டைமாடவீதியில் அவருக்குநிலங்கொடுத்து-பிரணவமண்டபத்தின் மேற்சாரலில்அவர்சியர்அண்ணாமலைமுதலியாரால் சத்திரங்கட்டுவித்தாற்போல்,பலரும்வந்திளைப்பாறியிருக்கச் சத்திரமுங்கட்டுவித்தனர்.

சுக்கிலவருடத்தில் மேற்கூறியதொட்டிக்கலை சபாபதிமுதலியாரைக்கொண்டு இதுவனாகிலமாகியில்லாதிருந்த துவஜஸ்தம்பம்-பிரணவகிரீதியாககைலாசநாதர்சந்நிதியிற்பதித்து அவரால்வெள்ளித்தகடுபதிந்ததொட்டிலொன்றமைவித்து அவ்வாண்டுதொடங்கியுபயகாரர்களையேற்படுத்தித் தொன்றுதொட்டமுறையேபவனியாடல்முதலாக ஆனிமாதத்தில்பிரமோற்சவநைமித்தியங்களுஞ்செய்துவருகின்றனர்.

தம்பிரானவர்கள்விபவவருஷத்திற்றிருப்போரூர்க்குக்குணகடற்கரையின்கண்ணதாகி விஷ்ணுதேவர்திருப்பதிகள் நூற்றெட்டினொன்றாகிய திருவிடவெந்தை,தென்பாலுள்ளமாமல்லபுரம்,இவந்நிற்கும்திருக்கழுக்குன்றத்திற்கும், நடந்தஆலயத்திருப்பணிகளிலும்கும்பாபிஷேகங்களிலும்முறையே அத்தலங்களையபிமானித்த உபயவேதாந்தப்பிரவர்த்தகர்வேங்கடாத்திரிசுவாமிகளும்,கு-ஆறுமுகமுதலியார் ருத்திரகோடித்தம்பிரான் முதலானவர்களும் வேண்டுகோள்செய்யச்சகலவிதமுயற்சியும்உதவியும்செய்து அவற்றையும் நடத்தினர்.

மேலும்தம்பிரானவர்கள் தமதுபலவகைமுயற்சியினாலும் பக்திமான்கள்புண்யவான்கள் முதலானவுத்தமர்களைக்கொண்டும்ஸ்ரீசுப்பிரமணியமூர்த்திக்கும் வள்ளிதெய்வயானை நாச்சியார்க்கும்அடுக்குப்பதக்கங்கள்,மகரகண்டிகை,பொன்னரிமாலை, மணிக்கடகங்கள், தலைக்கோலம்,ரத்நக்குதம்பைகள்முதலிய அநந்தம்பொன்மணித்திருவாபரணங்களும் வெள்ளிப்பாத்திரங்களும் இணைவிளக்குகளாதியவும் தேர்ச்சிலைமுதலியவும்அமைவித்ததுமல்லாமல் ஆண்டவர்க்குச்சிலபூஸ்திதிகளுஞ்சம்பாதித்து உத்தியாவனம்பூந்தோட்டம் தடாகங்களும் உண்டாக்கியிருக்கின்றனர் இன்னும்முத்துக்குமாரத்தம்பிரானவர்கள்செய்ததிருப்பணிகள்பலவுள்ளன.

இவற்றுடன் திருப்போரூர்வெண்பாஅந்தாதி கலித்துறையந்தாதி, பிரணவசைலமாலை, ஸ்ரீசமாபுரிமாலை, யுத்தபுரிமாலை, ஞானவிதிப்பவல், அநந்தகீர்த்தனங்கள், முதலியபலகிரந்தங்கள் நூதனமாகவியற்றியரங்கேற்றியச்சுப்பதித்துயாவர்க்கும் பத்திமையென்னும்பயிரைவிருத்திசெய்துகொண்டு ஆறுமுகம்துணையென்றுவசித்திருக்கின்றனர்.

இதுமுதல்நடக்கும்மற்றவைபின்னர்த்தொடங்கி எழுதித்தெரிவிப்பதில்யாவர்க்கும்விசதமாகவிளங்கும்.

| சிதம்பரசுவாமிகள் பரம்பரை பெயர். | திருநக்ஷத்திரம். |
| --- | --- |
| ௧. சிதம்பரசுவாமிகள்......* | வைகாசி-விசாகம்............ * |
| ௨. சிவசங்கரசுவாமிகள் ...* | மார்கழி-பூரட்டாதி ......... * |
| ௩. முத்துக்குமாரசுவாமிகள் | ஆனி-பூராடம்... ............* |
| ௪. சிவசங்கரசுவாமிகள் ...* | கார்த்திகை-திருவோணம் ... * |
| ௫. முத்துக்குமாரசுவாமிகள் | |
| ௬. சிதம்பரசுவாமிகள்... * | ஆடி-திருவோணம் ......... * |
| ௭. சிவசங்கரசுவாமிகள் . * | ஐப்பசி-சதயம்...............* |
| ௮. முருகேசசுவாமிகள்...* | வைகாசி-மிருகசீரிடம் ...... * |

இச்சரித்திரங்கள்

# சிதம்பரசுவாமிகள்

ஆதீனம்

௩ - ஆம் பட்டம்

## முத்துக்குமாரத்தம்பிரான்

அவர்கள்தந்த பிரதியிலிருந்து
சுருக்கமாக எடுத்தெழுதிப்
பதிப்பிக்கப்பட்டன.

ாபளிப்பு

பாய்ப்ப [illegible] பதவிகளையும்; பதம் கடந்த உண்மை பொருள் உம்பதவிகளை [illegible] மூத்தியும், அறியேனை—சிறிது மறியாத என்னை, இ உன் அடியார் [illegible]—இப்போது உன்னடியாரோடு [illegible], என் புரிந்த இனிய அருள்—தேவரீர் திருவுளந் தழைத்தருளிய திருவருள், நன்று—நன்றாயிருந்தது நன்றாயிருந்தது.

நின்ற, நிலைத்த எனறபெயரெச்சத்தின் விகுதி [illegible] நிகழ்காலத்தின்மேலும எதிர்காலத்தின்மேலும் நிற்றல் "[illegible] வுமமை என்னுஞ்சூ-இல் ஈங்கே என்ற மிகையால்" உன் நின் எ எணணம் புரிந்த ஒருசொனனீர்மைய, நன்று நனறு வியப்பு வந்த அடுக்குத்தொடா, உம்பா உவ்விடம் இது இடவாகுபெயரா மெனின்றது.

## எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

நாயகன்முகுந்தனசததளப்பொகுட்டினான்முகனென்னவீற்றிருககுந
தூயவனகருவைககளாநிழலமாந்தோனறுணையடிப்புகழினைவழுத்தி
மாயிருஞாலமெடுத்தெடுத்தேத்தவரம்பெறுமதுரநாவலாகள்
சேயிருவிசும்பிற்கற்பகநீழற்செல்வமுமவேண்டுவ திலையே.

(இ-ள்.) நாயகன்—இறைவனாகிய உருத்திரனும், முகுந்தன்—திருமாலும், சததளம் பொகுட்டின் நான்முகன—நூறுதளங்களையுடைய தாமரை பொருட்டில் வசிக்கும் பிரமனும் என்று கூற, வீற்றிருக்கும தூயவன்—சிறந்திருக்குஞ் விசுத்ததேகமுடையவனாகிய, களாநிழல் அமர்ந்தோன்—திருக்களா நிழலின்கண் எழுந்தருளியிருக்கின்ற இறைவனது, துணையடி புகழினை— இரண்டு திருவடிப்புகழசசியை, வழுத்தி—அடுத்துத் துதிதது, மா இரு ஞாலம்— பெரிய நிலவுலகிலுள்ளோர், எடுதது எடுத்து ஏத்த—எடுத்துப் பாற்ற, வரம் பெறும்—வரம் பெற்ற, மதுரநாவலர்கள்—இனியகவிதொடுக்கும் நாவல்லோர், சேய் இருவிசும்பில்—மிகவும் உயர்ந்த விண்ணுலகில், கற்பக நீழல் செல்வம் உம்—கற்பக நிழலில் வசிககும் இந்திரசெல்வத்தையும், வேண்டுவது இலை— வேண்டார்.

சிருஷ்டி திதி சங்காரமென்னு முத்தொழில்களையும் ஆண் பொருட்டு நடத்தத் திரிமூர்த்திகளாய்த் தனது இரியாதியின் த நின்றனெனபது தோன்றத் தனது எண் குணங்களில் ஒன்றா [illegible] வும், அவனது புகழ்ச்சியைத் துதித்து வரம்பெற்று அவனது [illegible] னை விரும்புவோர் திருமால் முதலிய பதங்களை வேண்டாரென் [illegible] மைந்தன் தந்திய எச்சவும்மை தந்து கற்பகநீழல் செ [illegible]